BOI
SRI LANKA

# வருடாந்த அறிக்கை 2021

இலங்கை முதலீட்டுச் சபை

BOI

SRI LANKA

# வருடாந்த அறிக்கை 2021

இலங்கை முதலீட்டுச் சபை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி | 5 |
| பணிபபாளர்கள் சபையின் பக்கத்தோற்றம் 2021 | 7 |
| இமுச இன் நோக்கும் பணிக்கூற்றும் | 10 |
| இமுச இன் முக்கிய விழுமியங்கள் | 11 |
| இமுச பக்கத்தோற்றம் | 12 |
| இமுச மைல்கற்கள் | 13 |
| உலக முதலீடுகளின் போக்கு 2021 | 14 |
| விசேட நிகழ்வுகள் | 17 |
| ஒரே பார்வையில் இமுச | 18 |
| இலங்கையில் முதலீட்டுச் செயலாற்றுகை 2021 | 20 |
| சமீபத்திய முயற்சிகள் | 23 |
| எங்கள் மக்கள் | 27 |
| கூட்டாண்மை சமூகப் பொறுப்பு | 30 |
| நிதிசார் விசேட நிகழ்வுகள் - 2021 | 31 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை –2021 | 73 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான இமுச இன் பதில் – 2021 | 89 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 107 |
| 31.12.2021 இல் உள்ளவாறு இமுச இன் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் | 108 |
| இமுச அலுவலகங்களின் விபரக்கொத்து | 109 |

# பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி




2021 ஆம் ஆண்டானது கோவிட்-19 தொற்றுநோயினால் பெரும்பாலும் தூண்டப்பட்டு, தொடர்ந்து முன்னர் ஒருபோதும் இல்லாதவகையில் சமூக, பொருளாதார சவால்களை எதிர்நோக்குகிறது. இந்த சிக்கல்கள், தொடர்ந்து நாட்டின் வெநேமு உட்பாய்ச்சல் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்திய அதேவேளை, தேசிய பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மைக்கும், வளர்ச்சிக்கும் இமுச இன் பங்களிப்புகளின் முக்கியத்துவம் முன் எப்போதும் இல்லாதவாறு மேலும் முக்கியத்துவம் அடைந்துள்ளது. சுற்றுலாத்துறை சரிவு, மற்றும் வெளிநாட்டு பணியாளர்கள் பணம் அனுப்புவதில் சுருக்கம் என்பவற்றின் விளைவாக நாட்டின் வெளிநாட்டு வருவாய்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில், இமுச இன் தொழில்முயற்சிகளின் மூலமானதெனக் கணக்கிடப்பட்ட ஏறத்தாழ 65 வீதமான தேசிய ஏற்றுமதியைப் பாதுகாத்து, முன்னேற்றுவது தலையாய முக்கியமாக ஆகியுள்ளது. இடைநிலை கோவிட்-19 சிகிச்சை வசதிகள் உட்பட ஊழியர் கவனிப்பு அடங்கலாக பல்வேறு மன்றங்களில் தொழில்முயற்சிகளின் நலன்களை செயலில் பிரதிநிதிப்படுத்துவதன் மூலம் இமுச இனால் அதன் கம்பனி செயலாற்றுகையில் இடையூறுகளைக் குறைக்க முடிந்தது. அதன் விளைவாக, பெரும் மாக்ரோ சவால்கள் இருந்தபோதும் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 இல் இமுச இனால் அதன் தொழில்முயற்சிகளின் ஏற்றுமதிகள் 23 வீதத்தினால் அதிகரித்ததை உறுதிசெய்ய முடிந்தது மாத்திரமல்ல, 2019 இல் தொற்றுநோய்க்கு முன்னரான மட்டத்துடன் ஒப்பிடுகையில் 2021 இல் 2 வீதத்தினால் அதிகரிக்கவும் முடிந்தது. இதன்படி, 2021 இல் இமுச நாட்டின் கைத்தொழில் ஏற்றுமதிக்கு 83 வீதத்திற்கு மேலான பங்களிப்பைச் செய்துள்ளது.

மேலும், இலக்கு வைக்கப்பட்ட மூலோபாயங்களை அமுல்படுத்துவது மூலம் வெநேமு உத்வேகத்தை மீள அடைகின்ற அதேவேளை, 2020 இல் ஏற்பட்ட வீழ்ச்சியின் பின்விளைவுகளிலிருந்து மீள்வதிலேயே கூடிய கவனம் செலுத்தும் ஆண்டாக 2021 ஆம் ஆண்டு அமைந்தது. 2021 இல் இமுச தொடர்ந்து 2020 இல் தொடங்கப்பட்ட இடைக்கால இணைக்கப்பட்ட மூலோபாயத்தை அமுல்படுத்தியதுடன், நாட்டிற்குள் இலக்குவைக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கு வேண்டிய சில முக்கிய கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் அமுல்படுத்தியது. அதன்படி, இமுச இனால் 2021 இல் ஐஅ $780 மிலி. வெநேமு உட்பாய்ச்சலை, 2020 இல் ஐஅ $687 மிலி க்கு எதிராகப் பெறமுடிந்தது. ஐஅ $2.57 பிலி. மொத்த முதலீட்டு பெறுமதியான விரிவாக்கங்கள் அடங்கலாக 126 முதலீட்டு திட்டங்களை (2020 இல் 144 க்கு எதிராக) அனுமதிப்பதற்கும் எங்களால் முடிந்தது. இந்த அனுமதிகளுடன், 2021 இல் இமுச இதுவரை இல்லாதவாறு அதி கூடிய வெநேமு அனுமதிகளை ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஐஅ $1,741 மிலி. அளவாகப் (தேசிய சொத்துக்களைப் பிரித்தெடுப்பதிலிருந்து கிடைத்த தொகையைச் சேர்க்காதபோது) பதிவுசெய்துள்ளது. பேரண்டப் பொருளாதார சவால்கள் அடுத்த சில ஆண்டுகளில் எளிதாக இருக்குமென நம்புவதால் இந்த அனுமதியளிக்கப்பட்ட திட்டங்கள் கூடுதலான வெநேமு பெறுதலை விளைவித்து, எதிர்காலத்தில் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்றுமதி சார்ந்த வர்த்தக பற்றாக்குறையை கடினமான நாணய மூலதன உட்செலுத்துதல்களில் ஈடுசெய்யலாமென எதிர்பார்க்கலாம்.

வருடத்தில் இமுச முறையே அம்பாந்தோட்டை பிரதேசத்தில் அரபொக்கவில் மருந்தாக்கத் துறைக்கும், மட்டக்களப்பு பிரதேசத்தில் ஏறாவூரில் புடவை உற்பத்திக்காகவுமென அர்ப்பணிக்கப்பட்ட இரண்டு கைத்தொழில் வலயங்களை தாபித்தது. மூலோபாய அபிவிருத்தித் திட்டங்களென அடையாளம் காணப்பட்ட இரண்டு வலயங்களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிட்ட துறைகளில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முக்கிய இடத்தைப் பூர்த்தி செய்வதற்காக கவர்ச்சியானதும், தனித்துவமான இடம் அடிப்படையினாலான வரி ஊக்குவிப்புகளையும், சலுகைகளையும் வழங்குகிறது.

இமுச இனால் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கை என்னவெனில் உலகளாவிய ரீதியில் வெநேமு மற்றும் இலங்கையில் மூலதன சந்தை முதலீட்டை ஊக்குவிப்பதற்காக இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் கொழும்பு பங்கு பரிமாற்றம் என்பவற்றுடன் இணைந்து முதன் முதலாக இலங்கை முதலீட்டு மன்றத்தை மெய்நிகர் நிகழ்வாக நடாத்தியதாகும். இலங்கையில் முதன் முதலாக இவ்வாறான மன்றம் 85 நாடுகளிலிருந்து 5,000 உள்ளூர் வெளிநாடுகளிலிருந்தான பங்குகொள்பவர்களை ஒன்றிணைத்து, 100 க்கும் மேற்பட்ட அமர்வுகளைக் கொண்டிருந்ததுடன், அரச தனியார் துறை பங்குதாரர்கள், உலகளாவிய நிபுணர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் பகிர்ந்துகொள்ளல், கருத்துக்கள், கொள்கைள், எண்ணக்கருக்கள் மற்றும் அறிவை தொடர்பை ஏற்படுத்தி, பரிமாறி, முதலீட்டாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே நேருக்கு நேர் சந்திப்புக்கான களம் அமைத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அதேவேளை இமுச இன் அதிகாரங்களை செயல்படுத்துவது, நெறிப்படுத்தப்பட்ட மற்றும் நிலையான சலுகைகள், வெளிநாட்டவர்களுக்கான விசா கொள்கைகளை சீரமைத்தல் என்று குறிப்பிட்டுக் கூறக்கூடிய இமுச இன் முதலீட்டாளாளுக்கு வசதியளிப்பதற்கு உகந்த திறனைக் கட்டுப்படுத்தும் ' சில முக்கிய கொள்கைத் தடைகளைத் தணிக்க முற்போக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

செயற்பாட்டின் நெறிப்படுத்தலின் ஒரு பகுதியாக பல்வேறு இலக்கமாக்கும் (digitization) நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன். முதலீட்டு ஒப்புதல் வழங்கல் மற்றும் சுங்க அனுமதி சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு வசதியளித்து, துரிதப்படுத்துவதற்காக அவ்வாறானவை பல வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டன. கிட்டத்தட்ட இந்த அனைத்து முயற்சிகளும் தொடர்புடைய செயற்பாட்டு அலுவலர்களுடன், நிறுவனத்தற்குள் இருக்கும் திறமைசாலிகளும் இணைந்து வடிவமைக்கப்பட்டு. விருத்தி செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய முயற்சிகள் இமுச யை செயற்பாட்டு எளிமை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் என்பவற்றுடன், குறைவான நேரம் மற்றும் செலவுகள் என்ற அடிப்படையில் வியாபாரம் செய்வதை இலகுவாக்குவதை கணிசமாக மேம்படுத்தச் செய்துள்ளன.

எங்களுடைய மிகத் திறமையான சபையின் வழிகாட்டல்கள், இமுச அணியினா், எங்களுடைய விசுவாசமான முதலீட்டாளர்கள் மற்றும் நிரல் முகவர்களின்' அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவின்றி இவை எதுவுமே சாத்தியமாகி இருக்காது. அவர்கள் அனைவருக்கும் இமுச க்கும், தேசத்தின் அபிவிருத்தி இயக்கத்திற்கும் அவர்களின் பங்களிப்பிற்காக இச் சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பசன் வணிகசேகர**

# பணிப்பாளர் சபையின் பக்கத்தோற்றம் 2021



### திரு.சஞ்சய மொஹற்றல
### தலைவர்

திரு.சஞ்சய மொஹற்றல முதலீட்டு சபைத் தலைவராக இருப்பதுடன், ஸ்ரீலங்கா விமான சேவை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் சகஸ்யாவின் சபை அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார். அவர் பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் அங்கத்தவராகவும் இருக்கிறார்.

இமுச இல் இணைந்துகொள்வதற்கு முன்னர் திரு. சஞ்சய மொஹற்றல இந்தோ-பசுபிக், ஐயூ, மற்றும் ஐஅ என்பவற்றில் அனுபவத்துடன், பொஸ்ரன் கென்சல்ற்றிங் குரூப் முகாமைத்துவ பணிப்பாளராகவும், பங்குதாரராகவும் இருந்தார். அவர் சே மற்றும் கை (M&A), முதலீடுகள், கூட்டாண்மை அபிவிருத்தி, மூலோபாயம், மறுசீரமைப்பு, சந்தைப்படுத்தல், டிஜிற்றல் தொழில்முயற்சி மற்றும் பாரிய அளவிலான மீள்கட்டமைப்பு, என்பவற்றில் விரிவான மற்றும் பேரண்ட அனுபவத்துடன், பிரின்ஸ ிப்பல் இன்வெஸ்ரேர்ஸ் அன்ட் ப்ரைவேற் ஈகியுற்றி (PIPE) வாடிக்கையாளர்கள், சவரின் வெல்த் பண்ட் (SWF), உலகளாவிய பன்னாட்டு கம்பனிகள், பிராந்திய மற்றும் உள்ளூர் கம்பனிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அதற்கு முன்னர் திரு மொஹற்றல இலங்கை யூனிலீவரில் ப்ராண்ட் முகாமையாளராகவும், மிலேனியம் ஐரி இல் ஒறக்கிள் உற்பத்தி நிபுணராகவும் பணிபுரிந்துள்ளார்.

திரு மொஹற்றல யுசீஎல்ஏ (UCLA) அன்டேசன் ஸ்கூல் ஒப் மனேஜ்மென்ற் (Anderson School of Management) இலிருந்து தனது எம்பீஏ (MBA) பட்டத்தைப் பெற்றார். ஒரு முழு கல்விமான் என்பதுடன், இலங்கை, மொறட்டுவை பல்கலைக் கழகத்திலிருந்து (சிறப்பு சித்தியுடன்) மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் பீஎஸ்ஸி (B.Sc) பட்டமும் பெற்றார். அவர் முகாமைத்துவ கணக்காளர் (CIMA-UK) என்பதுடன், சாட்டர்ட் இன்ஸ்ரிரியுற் ஒப் மார்க்கற்றிங்கிலிருந்து (CIM-UK) சந்தைப்படுத்தலில் முதுகலை டிப்ளோமாவும் (Post Graduate diploma in Marketing) பெற்றிருந்தார்.



### டாக்டர் ஹர்ஷா கப்ரால் ஜச (P.C)
### சபை அங்கத்தவர்

இலங்கையில் ஜனாதிபதி சட்டத்தரணியான டாக்டர் ஹர்ஷா கப்ரால் ஜச கம்பனிச் சட்டம், புலமைச் சொத்துச் சட்டம், வர்த்தகச் சட்டம், பிணைச் சட்டங்கள், சர்வதேச வர்த்தக சட்டம் மற்றும் வர்த்தக நடுத்தீர்ப்புகள் துறைகளில் முப்பத்தி மூன்று வருட அனுபவத்தைக் கொண்டவராவார். அவர் பதினாறு (16) வருடங்களாக ஜனாதிபதி சட்டத்தரணியாக இருப்பதுடன், இலங்கையில் வர்த்தக உயர் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களில் விரிவான கட்டளை தொழில் திறமையையும் கொண்டிருக்கிறார். அவுஸ்திரேலியா, கன்பரா பல்கலைக் கழகத்திலிருந்து நிறுவன சட்டத்தில் டாக்டர் பட்டத்தையும் பெற்றிருக்கிறார்.

டாக்டர் கப்ரால் பரிஸிலுள்ள சர்வதேச வர்த்தக சம்மேளனத்திலும் (ICC) சர்வதேச நடுத்தீர்ப்பாயத்திலும் பங்குபற்றும் ஓர் அங்கத்தவராகவும், பெடரேஷன் ஒப் இன்ரிகிரேட்டட் கொன்பிளிக்ற் மனேஜ்மென்ற் (FICM) இல் ஒரு பிரதிநிதித்துவ அங்கத்தவராகவும் இருப்பதுடன், இன்ரர்நஷனல் கொமெர்ஷல் டிஸ்பியூற்ஸ் ட்ரிபியூனலிலும் (ICDT) ஒரு பிரதிநிதித்துவ அங்கத்தவராக இருக்கிறார். அத்துடன் அவர் இன்ஸ்ரிரியூற் ஒப் சார்ட்டட் செக்கிறரறீஸ் அன்ட் அட்மினிஸ்ரேட்டர்ஸ் (UK) இல் இணையுரிமையுடைய ஒருவருமாவார்.



## திரு.சஞ்சய் குலதுங்க
## சபை அங்கத்தவர்

திரு சஞ்சய் குலதுங்க யூனிவஸிற்றி ஒப் சிக்காகோ பூத் ஸ்கூல் ஒப் பிஸினஸிலிருந்து மாஸ்டர் ஒப் பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன் பட்டம் பெற்றுள்ளார். அவர் ப.நி.ப. (CFA) சாட்டர்ட்டும் பெற்றிருக்கிறார்.

ஹொங்கொஹ் ஜார்டின் ப்லமிங்கில் முன்னாள் பிராந்திய பகுப்பாளரான திரு குலதுங்க, அறிவு செயல்முறை அவுற்சோர்ஸிங் நிறுவனம் ஒன்றான அம்பா ரிசேச் லங்காவின் தாபக பணிப்பாளருமாவார். உற்பத்தி, பொழுதுபோக்கு, மற்றும் நிதி அடங்கலாக பல்வகைப்பட்ட கைத்தொழில் நிறுவனங்களில் பி.நி.அ. (CEO), ஆகவும், நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் தாபகராகவும் பதவி வகித்துள்ளார். அவர் இலங்கை. ப.நி.ப மன்றத்தின் (CFA Society) தலைவராகவும், இலங்கை செக்கியூறிற்றீஸ் அன்ட் எக்ஸ்சேன்ஜ் கொமிஷனில் ஆணையாளராகவும், இலங்கை மத்திய வங்கியில் நிதிப் பிரிவு ஸ்திரத்தன்மை ஆலோசனைக் குழுவிலும் சேவையாற்றியிருக்கிறார்.



## டாக்டர் ஹர்ஷா சுபசிங்க
## சபை அங்கத்தவர்

டாக்டர் ஹர்ஷா சுபசிங்க இலங்கை, ஐஇ மற்றும் ஐஅ இல் அமைந்துள்ள கோட்ஜென் குரூப் ஒப் கொம்பனீஸின் (GodeGen Group of Companies) தாபகர், தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார். பயணம், கல்வி, மோட்டார் வாகனம், போக்குவரத்து வசதி, விவசாயம், சக்தி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போன்ற பலதுறை கைத்தொழில்களுக்கும் ட்ரவல்பொக்ஸ் வெகா (TravelBox Vega), சார்ஜ்நெற் (ChargeNET), ஐகுரோ (AiGROW), க்ளவுட் ஸ்மார்ட் ஸ்கூல் (Cloud Smart School) போன்ற உலகப் பகழ்பெற்ற வியாபாரப் பொருட்களுக்கும், புதிதாகக் கண்டுபிடித்த, முழுமையாக அளவிடக்கூடிய தீர்வுகளை வழங்குவதில் இக் கம்பனி பெயர்பெற்றதாகும். கோட்ஜென் இலங்கையில் செயற்கை நுண்ணறிவியலில் (Artificial Intelligence) மிகப்பெரிய தனியார் துறை முதலீட்டாளர்களில் ஒன்றாகும். கோட்ஜென்னின் வெட்டும் முனை பொருள் வடிவமைப்பு மற்றும் தீர்வுகளால் இலங்கையை உலக வரைபடத்தில் அவ்வப்போது புகழடையச்செய்த பெருமை டாக்டர் சுபசிங்கவிற்கு உண்டு.

டாக்டர் சுபசிங்க இலங்கைக்குள் புதிதாகக் கண்டுபிடிக்கும் கலாச்சாரத்திற்கு வலுவூட்டுவதில் முக்கிய பங்காற்றி வருவதுடன், அரச பல்கலைக் கழகங்களுடன் செயலாற்றி, உயர் பெறுமதி இநெ (IP) ஐ வழங்குகின்ற உண்மையான உலக திட்டங்களுக்கு வசதியளிக்கும் அதேவேளை, எதிர்கால சந்ததியினர் தொழில்துறைக்குத் தயாராக இருப்பதற்கு அவர்களை உருவாக்கும் ஒரே நோக்கத்துடன், கியூபிற்ஸ் லப்ஸ் (QBITS Labs) என்ற முயற்சியின் கீழ் அரச பல்கலைக்கழகங்களில் பல ஆஅ (R&D) திட்டங்களுக்கு பிரதான அனுசரணையாளராகவும் இருந்திருக்கிறார். மொறட்டுவை பல்கலைக் கழகத்திலுள்ள கியூபிற்ஸ் லப்ஸ் அதன் மாணவர்களுக்கு 3 வருட தொழில் செய்துகொண்டு பிஎச்டி (PhD) ஐ வழங்குகிறது.

டாக்டர் சுபசிங்க ட்ரேஸ் எக்ஸ்பேர்ட் சிற்றியை (Trace Expert City) ஆரம்பித்த முக்கியத்தவர்களில் ஒருவரும், உப தலைவருமாவார். இங்கு இலங்கையில் அசாதாரண பொருட்களை கட்டியெழுப்புவதற்கான புதிதாகக் கண்டுபிடிக்கும் துறையிலுள்ள மிகவும் திறமையான பணியாளர்களுக்காக நட்புச் சுற்றுப்புறச் சூழலும், வசதிகளுடனுமான உலகத் தரம்வாய்ந்த வேலைத் தலங்களைக் கட்டுவதற்கு ட்ரேஸ் இலங்கை நஅஅ (UDA) உடனான நீண்ட காலத் திட்டத்திற்கு தலைமை தாங்கியுள்ளது.

டாக்டர் சுபசிங்கவின் கல்வித் தகைமைகள் செயற்கை நுண்ணறிவு மற்றும் மென்பொருள் முகவர்கள் ஆய்வில் பிஎச்டி (PhD), தகவல் தொழில்நுட்பத்தில் முதுகலை மற்றும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து மின் மற்றும் மின்னணு கணனி பொறியியல் பட்டதாரி என்பவற்றை உள்ளடக்கியதாகும்.



## திரு.ஜயமின் பெல்பொல
## சபை அங்கத்தவர்

திரு ஜயமின் பெல்பொலவிற்கு கொல்ட்மன் சச்சே (யூகே) (Goldman Sache (UK)) மற்றும் ஐ.அ.நா. நோமுரா (Nomura) உட்பட சர்வதேச முதலீட்டு வங்கியியல் மற்றும் சொத்து முகாமைத்துவம் என்பவற்றில் 10 வருடங்களுக்கு மேலான அனுபவம் உள்ளது. அவர் வோல் ஸ்றீரில் (Wall Street) புதிதாக உண்டாக்கும் திறமைக்கும், அதி உயர் விளைவைக் கொடுக்கும் முதலீட்டு மூலோபாயத்திற்கும் அடையாளம் காணப்பட்ட ஒரு குழுவான கோல்ட்மன் சச்சியில் விரும்பத்தக்க பிரின்ஸிபல் ஸ்ரரஜீஸ் (Principal Strategies) குழுவில் பணிபுரிந்த ஒரேயொரு இலங்கையராவர். திரு பல்பொல அவருடைய தொழிலில் பல்வேறு துறைகளிலும், நாடுகளிலும் ஐஅ$ 20 பில்லியனுக்கும் கூடுதலான பெறுமதிவாய்ந்த சர்வதேச முதலீடுகளைக் கட்டமைத்து, முகாமைத்துவம் செய்துள்ளார்.

திரு பல்பொல ஒரு மூத்த ஆலோசகராக ஐஅ. வங்கிகள் மற்றும் சர்வதேச மத்திய வங்கிகளில் வங்கியியல் துறை மறுசீரமைப்புக்கு ஆலோசனையும் வழங்கியுள்ளார். விசேடமாக கட்டுப்பாட்டாளர்களுக்கும் அமெரிக்க வங்கியில் பணிப்பாளர் சபைக்கும், டீபிஎஸ் (DBS), வெல்ஸ் பார்கோ (wells Fargo) மற்றும் டொய்ச் வங்கி (Deutsche Bank) ஆகியவற்றிற்கும் போதுமான மூலதனம் பற்றிய தீர்மானங்கள், மறுமூலதனங்கள், வங்கியியலில் டிஜிற்றல் புதிய கண்டுபிடிப்புகளின் பிரயோகம் பற்றியும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தனது நிதித்துறை அனுபவத்தைக் கட்டியெழுப்பி, திரு பெல்பொல நிதிசார் தொழில்நுட்பம் (fintech) என்ற பரப்பில் ஒரு முதலீட்டாளராகவும், தொழில் முயற்சியாளராகவும் பிரவேசித்தார். அவர் தனது தொழில்முயற்சியின் பயணத்தை பாரம்பரியமற்ற சொத்துக்களை மதிப்பிடுவதற்கான ஒரு தனியுரிமை மாதிரியை அபிவிருத்தி செய்து, அதனை ஒரு லோஸ் ஸ்ரீற் வங்கிக்கு விற்பனைசெய்து ஆரம்பித்தார்.

தொழில்நுட்பத்தையும், தரவு அறிவினையும் நிதிசார் துறையில் பிரயோகிப்பதில் ஆசியாவில் ஒரு மிகச் சிறந்த நிதிசார் தொழில்நுட்ப தொடக்கமாக அண்மையில் அடையாளம் காணப்பட்ட ஒரு கம்பனியான மணிவேக்ஸ் ரெக்னோலஜிர்ஸின் தாபக தலைவராகவும் ஜயமின் இருந்தார்.

தற்போது அவர் ஜயாரு ட்ரேட் பாட்னர்ஸின் (Jayaru Trade Partners) தலைவராகவும், சிலோன் ஈகோ ஸ்பைசஸின் (Ceylon Eco Spices) சபை பணிப்பாளராகவும் சேவையாற்றுகிறார். ஜயாரு ட்ரேட் பாட்னர்ஸ் உலகளாவிய வாணிபப்பொருட்கள் சந்தைக்கு உட்கட்டமைப்பு, நிதியில் மற்றும் செயற்பாட்டு சேவைகளை வழங்குகிறது. சிலோன் ஈகோ ஸ்பைசஸ் நிறுவனம் நீடித்த விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்து, 10 சர்வதேச சந்தைகளுக்கு மேலாக சேவைசெய்யும் முன்னணி இலங்கை ஏற்றுமதியாளராகும்.

திரு பெல்பொல பிஸினஸ் அட்மினிஷ்ரேஷனில் (MBA) முதுகலைமானிப் பட்டத்தை ஹவாட் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றார். அவர் தனது சாட்டரை (Charter) ஐஅ சீஎப்ஏ நிறுவனத்திலிருந்தும், (CFA Institute, (USA), CIMA (UK) ஐயும் பெற்றுள்ளார். திரு பெல்பொல 20 வயதில் உலகில் CIMA முகாமைத்துவ கணக்காளராகிய மிகவும் இளைய வயதினராவார். அந் நாட்களில் CIMA பரிசை வென்ற இளவயதினர் இவராவார். அவர் CIM (யூகே) இலிருந்து பட்டப்படிப்புக்கு பின்னரான டிப்ளோமாவையும் பெற்றிருந்தார்.

எங்கள்

# நோக்கு

“ஆசியாவின் நிலையான முதலீடுகளுக்காக அதிசிறந்த கவர்ச்சிமிக்க கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைத்தல்”

எங்கள்

# பணி

“இலங்கைக்கு தரமான முதலீட்டினைக் கவர்ந்தீர்ப்பதற்கும், அதனைத் தக்க வைப்பதற்கும் உள்ள சாத்திய தன்மையை நிறைவேற்றுவதற்காக மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதி அடிப்படையொன்றுக்கு இட்டுச் செல்வதற்கும், மிகச்சிறந்த தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கம் என்பவற்றினூடாக அறிவையும், திறன்களையும் மேம்படுத்துவதற்கும், இலங்கை முதலீட்டுச் சபை நேர்மறையாகவும், வேகமாகவும் செயலற்றுகின்றது.”

# முக்கிய **விழுமியங்கள்**

## ◈ செயல்திறன் மற்றும் சாதனைக்கான ஆர்வம்:

இமுச ஆனது மேன்மையடைய விரும்புகின்றதான ஆனால் யதார்த்தமான முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற இலக்குகளை அடையும்.

## ◈ பொது மற்றும் தனியார் கோளங்களைக் கட்டுப்படுத்துதல்:

எங்களுடைய பொருளாதாரத்தை செழிப்படையச் செய்வதற்கு உதவும் முதலீடுகளை எளிதாக்கி, பாதுகாத்து வளர்ப்பதில் இமுச பெருமை கொள்ளும். நாங்கள் பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து, பங்குதாரராக அவர்களின் பணிக்குப் பங்களிப்பு செய்யும் அதேவேளை எங்களுடைய பணியையும் வழங்குவோம்.

## ◈ ஒருமைப்பாடு மற்றும் தொழில்முறை:

முதலீட்டாளர்களின் தேவைகளை விளங்கி, சரியான நேரத்தில் வர்த்தக மற்றும் புதுமையான தீர்வுகளை வழங்குவதில் இமுச அர்ப்பணம் செய்யும். நாங்கள் ஒருமைப்பாடு, நேர்மை, நாணயம், நம்பகத்தன்மை, நம்பிக்கை, நியாயமாக நடத்துதல், மரியாதை மற்றும் அக்கறை என்பவற்றை இதயபூர்வமான அர்ப்பணிப்பில் கொண்டிருப்போம்.

## ◈ உயர்ந்த வாடிக்கையாளர் சேவை:

போட்டியிடும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு அமைவிடங்களை விட செயற்படுவதுடன் கணிசமான சிறந்த மட்டம்.

## ◈ மக்கள்:

திறன், ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் அதன் மக்களின் சிறப்பிற்குப் பொறுப்பாக இருத்தல் என்பவற்றிற்கு இமுச மதிப்பளிக்கும். பதவியினர் பணியாற்றுவதற்கும், விருத்தி செய்துகொள்வதற்கும், வெற்றியடைவதற்கும் இமுச யை ஒரு சிறந்த இடமாக ஆக்குவதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.

# இமுச பக்கத்தோற்றம்

இலங்கை முதலீட்டுச் சபை முதலீட்டு மேம்பாட்டுக்கான கேந்திர புள்ளியாக தொழிற்படுதல், அந்நிய செலாவணி வருவாயைப் பன்முகப்படுத்தி அதிகரித்தல், வலய அபிவிருத்தி மூலம் குடியரசிற்குள் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகளைத் தாபிப்பதை ஊக்கப்படுத்தி, ஆதரிப்பதுடன், உரிய நேரத்தில் பொருளாதாரத்தின் அடிப்படையைப் பெருக்கி, பலப்படுத்தும் ஆணையுடன் 1978 இல் அமைக்கப்பட்டது.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை இயக்கும் முக்கிய நிறுவனமாக அடையாளம் காணப்பட்டு, இலங்கை முதலீட்டுச் சபை திறமையான, முக்கிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், ஏற்றுமதியை ஏற்படுத்துதல், தொழில்நுட்பம் மற்றும் நாட்டின் திறன் பரிமாற்றத்தை மேம்படுத்துதல் என்பன மூலம் வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்ந்து, நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கிறது. கட்டுநாயகவில் 1978 இல் முதலாவது ஏற்றுமதி செயலாக்க வலயத்தை ஆரம்பித்ததிலிருந்து இன்று நாடு முழுவதிலும் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு வேண்டிய மின்சாரம், நீர், போக்குவரத்து வசதிகள், தொடர்பாடல் மற்றும் கழிவு அகற்றும் வசதிகள் போன்ற தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்ற 15 ஏசெவ ங்கள் உள்ளன.

## முன்மொழிவு

வெளிநாட்டு முதலீட்டை இயக்குவதுடன், பலன்தரக்கூடிய முதலீட்டு சூழ்நிலையை உருவாக்குவதற்கு தேசிய பொருளாதார கொள்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் தேசத்திற்கு சேவை செய்வதே இமுச இன் தேவையாகும். ஏற்றுமதி வருமானத்தை உருவாக்கி, சர்வதேச முதலீட்டுக்காகத் தேடப்பட்ட இடமாக இலங்கையை வெளிப்படுத்துவதற்கும், நிலைபேறான வெளிநாட்டு முதலீட்டை அடைவதற்கும் அது மிகவும் பிரயத்தனம் செய்கிறது.

## நோக்கங்கள

இமுச இன் முக்கிய நோக்கங்களை வருவனவற்றில் குறிக்கோளாகக் கொண்டுள்ளது: போஷாக்களிப்பதுடன், பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல்; பொருளாதாரத்தின் அடித்தளத்தை விஸ்தரித்து, பலப்படுத்துதல்; வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஊக்கப்படுத்தி, மேம்படுத்துதல்; வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்திற்கான மூலங்களைப் பலவகைப்படுத்துதலுடன் ஏற்றுமதி சம்பாத்தியங்களை அதிகரித்தல் மற்றும் குடியரசிற்குள் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகளை நிறுவுவதுடன், அபிவிருத்தி செய்தலையும் ஊக்குவிப்பதுடன்; பேணுதலும் ஆகும்.

## பங்களிப்பு

- முன்னுரிமை துறைகளை இலக்கு வைத்து முதலீடுகளைக் கவர்வதற்கு அரசாங்கத்தின் முதலீட்டு கொள்கைகளை அமுல் படுத்துவதற்கு உதவி செய்து, வெநேமு இன் மட்டத்தைப் படிப்படியாக அதிகரிக்கச்செய்து, தேசிய வளர்ச்சி இலக்கினை அடைவதற்குப் பங்களித்தல்.

- இலங்கையில் உயர் பெறுமதிசேர்/உயர் தொழில்நுட்ப உற்பத்தி, உயர் பெறுமதிசேர் ஆடை, த.தொ. (IT) செயல்படுத்தப்பட்ட சேவைகள், சுற்றுலாத்துறை, உணவு பதனிடுதல், ஏற்பாட்டியல், கல்வி மற்றும் பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அல்லது ஏனைய தெரிவு செய்யப்பட்ட துறைகளில் கருத் திட்டங்களை ஆரம்பிக்க உத்தேசிக்கும் முதலீட்டாளர்கள் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் முதலாவது புள்ளியாக இமுச தொழிற்படுகிறது. முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக தகவலும், வழிகாட்டுதலும் வழங்கப்படுவதுடன், ஏனைய நிரல் நிறுவனங்களிடமிருந்து வேண்டப்படும் ஒப்புதல்களும் இமுச இனால் ஒருங்கிணைக்கப்படுகிறது.

- கருத்திட்ட முன்மொழிவுகளை அங்கீகரிப்பதற்காக அந்தந்தத் துறை முதலீட்டு விண்ணப்பங்கள் இமுச இனால் மதிப்பீடு செய்யப்பட்டு, சலுகைகள் வழங்கி, வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்குவது எளிதாக்கப்படுகிறது.

- கருத்திட்டத்தை ஆரம்பித்தது முதல் அதனை அமுல்படுத்தி, கருத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு இறக்குமதி/ஏற்றுமதியை எளிதாக்கி, கவனித்தல், மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதியை அனுமதித்தல் மற்றும் முடிவுப் பொருட்களின் ஏற்றுமதி என்பவற்றிற்கு இமுச முதலீட்டாளர்களுக்கு கருத்திட்ட காலம் முழுவதும் உதவி வழங்கிவருகிறது.

- இமுச குறைந்தளவு காலப்பகுதிக்குள் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான தளங்களில் உடனடியாகக் கிடைக்கக்கூடியவாறு வழங்குவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்றுமதி செயலாக்க வலயங்களை அபிவிருத்திசெய்து வருகிறது.

# இமுச மைல்கற்கள்

**1978** 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு(கொ.பெ.பொ.ஆ.) தாபிக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்கவலயம் தாபித்தல் இதுவே இன்று வரை பராமரிக்கப்பட வேண்டியதும், முதலாவதும், பெரியதுமான வலயமாகும்.

**1986** வலய தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்காக கொ.பெ. பொ.ஆ. இனால் ஒரு தொழில் வங்கி அமைக்கப்பட்டது.

1986 இல் இமுச இன் இரண்டாவது வலயமாக பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல.

**1990** வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு, கொ.பெ.பொ.ஆ. என்பன ஒன்றாக இணைக்கப்பட்டு, கொ.பெ.பொ.ஆ. இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டை அங்கீகரிக்கும் ஏக அதிகார சபையாக ஆகியது.

**1991** தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக கொக்கல ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல்.

**1992** 1992 ஆம் ஆண்டின் சட்ட இல. 49 இன் கீழ் இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக இணைக்கப்பட்டதுடன். இமுச கொபெபொஆ இன் வாரிசாக தாபிக்கப்பட்டது.

அரச பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலையில்லாமையைக் குறைப்பதற்காக “200 தைத்த ஆடைகள் கைத்தொழில் நிகழ்ச்சி” அறிமுகப்படுத்தப்பட்டது.

**1995** கண்டி கைத்தொழில் பூங்கா தாபித்தல்.

**1998** முதலீட்டுச் சபை, உட்கட்டமைப்பு முதலீட்டுப் பணியகத்துடன் (உமுப (BII) ஒன்றிணைக்கப்பட்டது. மீரிகம ஏ.செ.வ. உம், மல்வத்த ஏ.செ.பூ உம் தாபித்தல.

**1999** ஹொரண ஏ.செ.வ. உம், வத்துபிற்றிவல ஏ.செ.வ. உம் தாபித்தல்.

**2000** பொல்காவெல ஏ.செ.வ., மாவத்தகம ஏ.செ.வ. மற்றும் மிரிஜாவில ஏ.செ.வ. என்பன தாபித்தல்.

**2001** சீத்தாவக வலயம் இலங்கை முதலீட்டுச் சபையின் சீத்தாவக ஏ.செ.வ. ஆக சுவீகரிக்கப்பட்டது.

**2006** கைத்தொழில் துறைகளை கிராமப்புறத்திற்குக் கொண்டு- செல்லும் நோக்கத்துடன், “300 தொழில்முயற்சிகள் நிகழ்ச்சி” ஆரம்பிக்கப்பட்டது.

**2008** உவமை இன் 09 தளங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, இமுச இன் தலைமையகம் கொழும்பு உலக வர்த்தக மையத்தில் நிரந்தரமாக தாபிக்கப்பட்டது.

**2009** இமுச ISO 9001:2000 சான்றிதழைப் பெற்ற முதலாவது அரச நிறுவனமாகும்.

இமுச யாழ்ப்பாண அலுவலகம் நிறுவப்பட்டது.

**2011** ஐ.அ.$.1 பிலி. வெ.நே.மு. இலக்கு எட்டப்பட்டது.

**2013** பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் (CHOGM) 2013’ இற்குச் சமாந்தரமாக நடைபெற்ற ‘பொதுநலவாய வர்த்தக மன்றத்தின் பிரதான ஒருங்கிணைப்பாளர் இமுச ஆகும்.

**2014** இமுச “ஆசிய பசுபிக் வர்த்தக மன்றம் 2014” க்கு அனுசரணை வழங்கியது.

**2017** -இமுச இன் 40 வது ஆண்டு விழா.

**2018** அதிஉயர் வெ.நே.மு ஐ அ. $.2.37 பிலி. அடையப் பெற்றது.

**2019** பிங்கிரிய ஏசெவ: தாபித்தல்.

**2020** ஏறாவூரிலும், அரபொக்கவிலுமாக இரண்டு புதிய விசேட வலயங்களின் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டது..

**2021** முதன் முதலாக இலங்கை முதலீட்டு மன்றம் 85 நாடுகளைச் சேர்ந்த 5,000 க்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும், வெளிநாட்டு பங்குபற்றியோருக்கு மெய்நிகராக நடாத்தப்பட்டது.

# உலக முதலீடுகளின் போக்கு 2021

எதிர்பார்த்தவாறு 2021 இல் உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீடு (வெநேமு) 77% இனால் மீண்டெழுந்து, கொவிட்-19 தீவிர நோய் பரவலைத் தொடர்ந்து, 2020 இல் ஆங்காங்கு பதியப்பட்ட அதன் பெறுமதியான ஐஅ $929 பிலியனிலிருந்து மதிப்பீட்டளவில் ஐஅ $1.65 திரிலியனை அடைந்தது. இந்த பெறுமதி 2019 இல் தீவிர நோய் பரவலுக்கு முன்னராகப் பதியப்பட்ட மட்டமான ஐஅ $1.54 திரிலியனைத் தாண்டியுள்ளது.

உலகளாவிய வெநேமு இல் ஒட்டுமொத்த அதிகரிப்பும், மேன்நோக்கிய மீட்பும் பதிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை பிராந்திய மற்றும் துறை வாரியாக பகுதி பகுதியாக ஒப்பிட்டுப் பார்க்கையில் மீட்பு வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவு சீராக அமைந்திருக்கவில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளினால் உலகளாவிய வெநேமு பாய்ச்சலைக் கவர்ந்து, ஏறத்தாழ மூன்றில் நான்கு மொத்த அதிகரிப்பைப் பதிவுசெய்த போதும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள், குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் சுமாரான வளர்ச்சி மீட்பை மாத்திரமே கண்டன.

2021 இல் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கிடையே ஐஅ $777 பிலி. அதிகூடிய உயர்வு காணப்பட்டது 2020 இல் விதிவிலக்காக குறைந்த மட்டத்துடன் ஒப்பிடும்போது மும் மடங்கு அதிகரிப்பாகக் குறிப்பிட்டது. இதில் 80% க்குக் கூடுதலான ஐரோப்பிய உட்பாய்ச்சல் குழாய் பொருளாதாரத்திற்கு பாரிய ஊசலாட்டம் காரணமான அதேவேளை, ஐஅ வின் இரண்டு மடங்கு உட்பாய்ச்சல் பெரும்பாலும் எல்லை தாண்டிய இணைப்பு மற்றும் கையகப்படுத்துதல் (இ மற்றும் கை) காரணமாகவெனக் கணக்கிடப்பட்டது.

### வெநேமு உட்பாய்ச்சல்கள் 2019-2021 (பிலியன் டொலர்கள்)




மூலம்: யுஎன்சீரீஏடீ (இன்வெஸ்ற்மென்ற் ட்ரெண்ட் அறிக்கை, ஜனவரி 2022)

கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவை மையமாகக்கொண்ட வளர்ச்சி முடுக்கத்துடன், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வெநேமு பாய்ச்சல்கள் 30 வீதத்தினால் அதிகரித்து, மொத்தம் ஐஅ $870 பிலி. ஐ நெருங்கியது. தெற்கு ஆசியா 2020 இல் தனது வெநேமு உட்பாய்ச்சல்களை அதிகரித்தபோதும், அதுவே ஆசியாவிற்குள் எதிர்மறையான வெநேமு வளர்ச்சி விகிதத்தைக் குறிக்கும் ஒரேயொரு பிராந்தியமாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மொத்த வெநேமு உட்பாய்ச்சலில் 24 வீத சரிவுடன் இருந்தது. லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பிராந்தியங்கள்கூட தங்களுடைய தீவிர நோய் பரவலுக்கு முந்திய மட்டங்களுக்கு நெருக்கமாக மீள முடிந்தன.

நீண்ட கால நிதிசார் நிலைமைகள், மீட்பு தூண்டுதல் தொகுப்புகள் மற்றும் கடல்கடந்த முதலீட்டு நிகழ்ச்சிகள் என்பவற்றால் வலுவூட்டப்பட்ட சர்வதேச திட்ட நிதி ஒப்பந்தங்கள் 53% இனால் உயர்ந்துள்ளதால், உயர்-வருமான பிராந்தியங்கள், ஆசியா, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன், உட்கட்டமைப்புத் துறை மதிப்பில் 91% உயர்ந்துள்ளது. அதன் விளைவாக விசேஷமாக புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் கைத்தொழில் சொத்து உப துறைகளில் உட்கட்டமைப்பில் திட்ட நிதி தீவிர நோய் பரவலுக்கு முன்னரான மட்டங்களுக்கு மேலாக அதிகரித்துள்ளது.

மாறாக கைத்தொழில் மற்றும் உலகளாவிய பெறுமதி சங்கிலிகளில் கிரீன் பீல்ட் முதலீட்டுத் திட்ட அறிவிப்புகள் மதிப்பில் 7% அதிகரிப்பை மாத்திரம் குறிப்பிடுவதால் ஓரளவு இல்லையெனலாம். உலகளாவிய பெறுமதி சங்கிலி ஊக்குவிப்பு தீவிர கைத்தொழில்களில் ஆரம்பிக்கப்பட்ட பல புதிய திட்டங்கள் மேலும் சரிந்தன. அதன்படி, கிரீன்பீல்ட் முதலீட்டு நடவடிக்கை தகவல் மற்றும் தொடர்பாடல்/இலக்கமுறை துறை முழு மீட்பு செய்தது தவிர, அனைத்து துறைகளிலும் சராசரியாக 30% தீவிர நோய் பரவலுக்கு முன்னரான மட்டங்களுக்குக் கீழாக தொடர்ந்தும் இருக்கின்றன.

## அறிவிக்கப்பட்ட கிரீன்பீல்ட் திட்டங்கள், 2019-2021




மூலம்: யுஎன்சீரீஏடீ (இனவெஸ்ற்மென்ற் ட்ரெண்ட் அறிக்கை, ஜனவரி 2022)

## அறிவிக்கப்பட்ட கிரீன்பீல்ட் திட்டங்கள், தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்கள் மூலம், 2019-2021 (பிலியன் டொலர்கள்) – பெறுமதி அடிப்படையில் முதல் 5 கைத்தொழில்கள்




மூலம்: யுஎன்சீரீஏடீ (இனவெஸ்ற்மென்ற் ட்ரெண்ட் அறிக்கை, ஜனவரி 2022)

ஐக்கிய அமெரிக்கா மிகப்பெரிய புரவலன் பொருளாதாரமாகத் தனது நிலையைப் பேணி, 2021 இல் அதன் வெநேமு ஐ 114% இனால் அதிகரித்து, எல்லை தாண்டிய இணைப்பு மற்றும் கையகப்படுத்துதலுடன், மதிப்பில் ஏறத்தாழ மூன்று மடங்காகி, ஐஅ $323 பிலி. ஆகியது. ஐரோப்பிய யூனியன் கூட வெநேமு பாய்ச்சலில் 8% அதிகரிப்பை அனுபவித்த அதேவேளை, சீனா வெநேமு உட்பாய்ச்சலில் 20% அதிகரிப்பைக் கண்டு, ஐஅ $179 பிலி.ஐக் குறிப்பிட்டது. அத்துடன், பிரேஸில் 2020 இல் பதியப்பட்ட குறைந்த மட்டங்களிலிருந்து அதன் வெநேமு ஐ இரு மடங்காக்கி, ஐஅ $58 பிலி. ஆகியது. மறுபுறம் இந்தியாவிற்கான உட்பாய்ச்சல் 2020 வரை தொடர்ந்த இணைப்பு ஒப்பந்தங்கள் மீண்டும் பின்பற்றப்படாததால் உட்பாய்சசல் 26% இனால் குறைக்கப்பட்டது.

2022 ஐ முன்னோக்கிப் பார்க்கையில் உலகளாவிய வெநேமு இன் போக்கு 2021 இல் மீள் எழும் வளர்ச்சியினால் சாதகமானதாகத் தெரிவதால், மீண்டும் செய்வதற்கான வாய்ப்புள்ளது. புதிய குழாய் பாய்ச்சல்களின் அடிப்படைப் போக்கு, ஒருமுறை பரிவர்த்தனை, உள் நிறுவன நிதிசார் பாய்ச்சல்கள் என்பன 2021 போன்று ஒப்பீட்டளவில் முடக்கப்பட்டதாக இருக்கும் அதேவேளை, உட்கட்டமைப்பு துறையில் சர்வதேச திட்ட நிதி தொடர்ந்தும் வளர்ச்சி வேகத்தை அளிக்கும். எவ்வாறாயினும் காலத்துக்குக் காலம் தீவிர நோய் பரவல் பிறழ்வுகள், தடுப்பூசிகளின் வேகம், உழைப்பு மற்றும் வழங்கல் சங்கிலி இடையூறுகள், சக்தி விலைகள் மற்றும் பணவீக்க அழுத்தம் போன்ற அதன் சொந்த முன்கூட்டிய அபாயங்கள் என்பன இல்லாது இல்லை.

# விசேட நிகழ்வுகள்




ஐஅ $2.56 பிலி பெறுமதியான 126 முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. (36 புதிய திட்டங்களும், 90 விரிவாக்கங்களும்)



நான்கு ஒழுங்கை மேம்பாலம் அமைத்து செயற்படுத்தும் திட்டத்திற்கு ஐஅ $821 மிலி ஒப்புதல் வழங்கப்பட்டது

கொழும்பு மேற்கு கொள்கலன் முனையம் அபிவிருத்தி செய்து, செயற்படுத்தும் திட்டத்திற்கு ஐஅ $651 மிலி முதலீட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது



இவ் வருடத்தில் ஐஅ $780 மிலி வெநேமு உட்பாய்சசலும்

ஐஅ $1,052 மிலி உள்ளூர் முதலீடும்



வணிகப்பொருள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகள்

ஐஅ $8.8 பிலி (தேசிய வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் 64% உம், தேசிய கைத்தொழில் ஏற்றுமதிகளின் 83% உம்)



2 ஏவெமு கள் பிரத்தியேகமாக மருந்தாக்கம் மற்றும் புடவை உற்பத்திகளுக்கு முதலீடு செய்வதற்குத் தயாராக உள்ளன

# ஒரே பார்வையில் இமுச

## வெநேமு உட்பாய்ச்சல்கள் (ஐஅ $ மிலி)




1978 முதல் 2021 வரை மொத்த வெநேமு உட்பாய்ச்சல் ஐஅ $20 பிலி

## பொருளாதார தாக்கம் 2021



**64%** தேசிய ஏற்றுமதிகளின்

**83%** தேசிய கைத்தொழில் ஏற்றுமதிகளின்

**96%** தேசிய தைத்த ஆடைகள் மற்றும் புடவை ஏற்றுமதிகளின்

**6%** மொத்த தொழிலாளர் படைகளி

***15***
செயற்பட்டுவரும் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள்

***2***
பிரத்தியேகமாக மருந்தாக்கம் மற்றும் புடவை உற்பத்திக்காக அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் (முதலீடு செய்வதற்குத் தயார்)

***> 1,600***
இமுச இன் கீழ் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நிறுவனங்கள்

***> 500,000***
திரண்ட நேரடி வேலைவாய்ப்பு

***ஐஅ $ 20 பிலி***
(1978-2021) காலப்பகுதியில் வெநெமு உட்பாய்ச்சல்

***ஐஅ $ 8.8 பிலி***
வருடாந்த வணிகப்பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி

மூலம்: இமுச மற்றும் மத்திய வங்கி

## வெநேமு துறைவாரியான பங்களிப்பு

## முதற் பத்து வெநேமு ஆதார நாடுகள்

### 2012 முதல் 2021 வரை வெநேமு உட்பாய்ச்சல் ஐஅ $12.8 பிலி







## ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் (ஏசெவ)




15 **ஏசெவகள்** செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன

**>265** நிறுவனங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன

**>130,000** வேலைவாய்ப்பு

**>ஐஅ $3 பிலி** வருடாந்த ஏற்றுமதிகள் வருமானம்

**2 ஏசெவ கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. (முதலீடு செய்வதற்குத் தயார்)**

பிரத்தியேகமாக மருந்தாக்கம் மற்றும் புடவை உற்பத்திக்காக (அம்பாந்தோட்டை மற்றும் ஏறாவூர் ஏசெவ கள்)

# இலங்கையில் முதலீட்டுச் செயலாற்றுகை 2021

## 2021 இல் திட்ட செயலாற்றுகை

மதிப்பிடப்பட்ட முதலீடு (ஐஅ$ மிலி)

| | வகை | திட்டங்களின் எண்ணிக்கை | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஆங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள | புதியவை | 36 | 1,601 | 415 | 2,568 |
| | விரிவாக்கம் | 90 | 140 | 412 | |
| திட்ட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டவை | புதியவை | 21 | 98 | 100 | 595 |
| | விரிவாக்கம் | 93 | 115 | 282 | |
| அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் | புதியவை | 16 | 25 | 87 | 430 |
| | விரிவாக்கம் | 37 | 104 | 214 | |
| வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்த திட்டங்கள் | புதியவை | 22 | 43 | 103 | 385 |
| | விரிவாக்கம் | 29 | 85 | 154 | |

குறிப்பு: மார்ச் 2022 இல் உள்ளபடி இரத்துச் செய்யப்பட்டவை தவிர

## 2021 இல் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம்

அங்கீகரிக்கப்பட்டவை

ஐஅ $2,568 மிலி
(36 புதிய திட்டங்கள்
90 விரிவாக்கங்கள்)

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவை

ஐஅ $1,230 மிலி
(23 புதிய திட்டங்கள்
56 விரிவாக்கங்கள்)

அமுல்படுத்தப்பட்டவை

ஐஅ $291 மிலி
(9 புதிய திட்டங்கள்
15 விரிவாக்கங்கள்)

குறிப்பு: 2022 மார்ச் இல் உள்ளபடி முன்னேற்றம்

## 2021 இல் வெநேமு உட்பாய்ச்சல்

2021 ஆம் ஆண்டு இலங்கையில் பதியப்பட்ட வெநேமு ஐஅ $780 மிலி. ஆகும். 2021 இல் கிடைக்கப்பெற்ற மொத்த வெநேமு இல் உற்பத்தி மற்றும் தொலைத்தொடர்புத் துறைகள் அதிகூடிய வெநேமு ஐப் பெற்றுக்கொண்டுள்ளன (ஒவ்வொன்றும் 29%). தொடர்ந்து ஆதன அபிவிருத்தித் துறை (18%), ஹோட்டல் துறை (9%) தகொ மற்றும் வெசெவெ (IT & BPO) துறை (6%) என்பனவாகும்.

### வெநேமு (ஐஅ $மிலி)துறைவாரியான பங்களிப்பு




### முதற் பத்து வெநேமு (ஐஅ $மிலி)ஆதார நாடுகள்



# இமுச தொழில்முயற்சிகளின் ஏற்றுமதிகள்

2021 ஆம் ஆண்டில் இமுச தொழில்முயற்சிகளின் ஏற்றுமதி ஐஅடொ 8,788 மிலி ஆகப் பதிவு செய்திருந்தது, அது தேசிய ஏற்றுமதியின் 64% ஆகவும், தேசிய கைத்தொழில் ஏற்றுமதியின் 83% ஆகவும் கணக்குக் காட்டியது. இமுச தொழில்முயற்சிகளின் மொத்த ஏற்றுமதிகளில் 60% ஆனவை தைத்த ஆடைகள் மற்றும் புடவை துறையிலிருந்ததான அதேவேளை, 13% றப்பர் துறையிலிருந்தும், 5% ஆனவை உணவு மற்றும் பானங்கள் துறையிலிருந்தும், 3% ஆனவை மி மற்றும் மி (E&E) துறையிலிருந்துமாகும். சேவைகள் துறை இமுச தொழில்முயற்சிகளின் மொத்த ஏற்றுமதிக்கு 8% பங்களிப்புச் செய்துள்ளது.







# வாணிபப் பொருட்கள் ஏற்றுமதி (ஐஅ $மிலி) 2020 எதிர் 2021



## 2021 இல் குறிப்பிடத்தக்க முதலீடுகள்

### உட்கட்டமைப்பு



- நான்கு ஒழுங்கை உயர் நெடுஞ்சாலை அமைத்து செயற்படுத்துவதற்கு சீனாவிடமிருந்து ஐஅ $821 மிலி பெறுமதியான முதலீட்டிற்கு இமுச அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- கொழும்பு மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்து, செயற்படுத்துவதற்கு இந்தியா, அதானி குழுமத்திற்கு ஐஅ $651 மிலி பெறுமதியான முதலீட்டிற்கு இமுச அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- கொழும்பு 04 இல் ஒரு கலவை அபிவிருத்தி திட்டத்தை அமைப்பதற்கு ரக்னா ஆராக்ஷக லங்காவுடன் ஐஅ $27.5 மிலி பெறுமதியான ஒப்பந்தம் ஒன்றை இமுச கைச்சாத்திட்டுள்ளது.. தற்போது திட்டம் கட்டுமானத்தில் உள்ளது.

### இறப்பர்



- இறப்பர் பால் மெத்தை உற்பத்தி செய்வதற்கான ஒரு திட்டத்தை அமைப்பதற்கு ஐஅ வைச் சேர்ந்த முதலீட்டாளர் ஒருவருடன் ஐஅ $20 மிலி பெறுமதியான ஒரு முதலீட்டிற்கு இமுச அங்கீகாரம் வழங்கி, ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.
- திட மற்றும் வாயுவினால் இயங்குகின்ற ரயர்களை (tyres) உற்பத்தி செய்வதற்கு ஒரு விரிவாக்க திட்டத்திற்காக குளோபல் றபர் இன்டஸ்ற்றீஸ் தனி. லிமிடட்டுடன் ஐஅ $20 மிலி பெறுமதியான ஒரு முதலீட்டிற்கு இமுச அங்கீகாரம் வழங்கி, ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

### ஏனைய உற்பத்தி



- படகுகள்/தோணிகளைக் கட்டுவதற்கான/பொருத்துவதற்கான ஒரு திட்டத்தை அமைப்பதற்காக மாலைதீவு முதலீட்டாளர் ஒருவருடன் ஐஅ $58 மிலி பெறுமதியான ஒரு முதலீட்டிற்கு இமுச அங்கீகாரம் வழங்கி, ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

### தைத்த ஆடைகள் மற்றும் புடவைகள்



- ஏறாவூரில் புடவை உற்பத்தி வலயத்தில் இரண்டு புடவை உற்பத்தி இயந்திரங்களை நிறுவுவதற்காக இந்தியாவிலிருந்தும், ஐஅ இலிருந்தும் முறையே ஐஅ $35 மிலி மற்றும் ஐஅ $30 மிலி பெறுமதியான இரண்டு முதலீடுகளுக்கு இமுச அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் ஒமேகா லைன் லிமிடட் உம், ஹெய்லீஸ் பப்ரிக்ஸ் பீஎல்சீ உம் முறையே ஐஅ $24 மிலி மற்றும் ஐஅ $23 மிலி பெறுமதியான இரண்டு விரிவாக்க திட்டங்களை அமுல்படுத்தியுள்ளன.

### சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு




- ஜப்பானுடன் ஒரு கூட்டு முயற்சியாக 184 அறைகளுடன் கூடிய கொழும்பு சர்வதேச விமான நிலைய ஹோட்டலை அமைப்பதற்காக ஐஅ $27 மிலி பெறுமதியான ஒப்பந்தம் இமுச இனால் கைச்சாத்திடப்பட்டது. தற்போது திட்டம் கட்டுமானத்தில் உள்ளது.
- மேல்வா ஹோட்டல்ஸ் அன்ட் றிசோர்ட்ஸ் பிரைவேற் லிமிடட்டுடன் ஐஅ $52 மிலி பெறுமதியான விரிவாக்கல் திட்டத்திற்கான ஒப்பந்தம் ஒன்றில் இமுச கைச்சாத்திட்டுள்ளது.

### தொலைத்தொடர்புகள்



- ஸ்ரீ லங்கா டெலிகொம் ஒரு விரிவாக்கலுக்காக ஐஅ $155 மிலி பெறுமதியான ஒப்பந்தம் ஒன்றை இமுச உடன் கைசாத்திட்டுள்ளது.

# சமீபத்திய முயற்சிகள்

மார்ச் 2020 இல் இமுச இனால் விருத்தி செய்யப்பட்ட ஒரு விரிவான மூலோபாயம் தெளிவானதும் செயற்படுத்தக்கூடியதுமாக முதலீட்டைக் கவரும் முன்னுரிமைகளைக் குறிப்பிடப்பட்ட காலக்கெடுக்குள் யதார்த்தமாக இணைத்து, வரையறுத்தது. புதிய மூலோபாயம் இலங்கையின் பொருளாதார நிலப்பரப்பை மாற்றுவதையும், ஒரு சாதகமான முதலீட்டு சூழலை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டது. அதனால் இந்த மூலோபாயம் இரண்டு பிரதான அம்சங்களில் கவனம் செலுத்துவதை ஏற்படுத்தியுள்ளது. ஒன்று "நாட்டின் கவர்ச்சி". மற்றையது "இமுச மறுபரிசீலித்தல்" ஆகும். அத்துடன் அது 7 தூண் அணுகுமுறை மூலம் தெளிவாக இணைக்கப்பட்டு, இலக்கு சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் (வெநேமு கள்) கவருவதற்குக் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையுடன், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக்கூடியதாக முன்னுரிமை வழங்கப்பட்ட துறைகளில் கவனம் செலுத்துகிறது.

## முன்னுரிமை வழங்கப்பட்ட ஆறு பரந்த துறைகளாவன:



| உற்பத்தி | தகொதொ | விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா | விவசாயம் மற்றும் உணவு பதனிடுதல | ஏனைய சேவைகள் | நிர்மாணித்தல், உட்கட்டமைப்பு மற்றும் தளவாடங்கள் |
|---|---|---|---|---|---|
| - மருந்தாக்கம்<br>- உயர் பெறுமதிசேர் தைத்தஆடை<br>- மின்னணுவியல மற்றும் மின் | - மென்பொருள் அபிவிருத்தி<br>- வாசெமு/ஞாசெமு,<br>- தகொ பயிற்சி கல்வி மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் | - விவ/சூழ சுற்றுலா<br>- சாகசம்/ திகிலூட்டும் சுற்றுலா<br>- ஆடம்பர ஹோட்டல்கள்<br>- வியாபார(MICE) சுற்றுலா | - இறப்பர்<br>- விவ/பதனிடப்பட்ட உணவுகள்<br>- மீன்பிடி | - பிராந்திய தஅ<br>- நிதிசார் சேவைகள்<br>- வர்த்தகம்<br>- கடல்வழி<br>- பல்கலைக்கழகங்கள் | - விரைவான போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் |

தகொதொ, விருந்தோம்பல் மற்றும் சுற்றலா ஆகிய துறைகள் "விளையாட்டு மாற்றிகள்" என அடையாளம் காணப்பட்ட அதேவேளை, விவசாயம் மற்றும் உணவு பதனிடுதல் துறையானது புதிய சாலை வரைபடத்தில் வேகமான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முக்கியமானதாகும். அடையாளம் காணப்பட்ட ஏனைய அதிக சாத்தியமுள்ள பகுதிகளாவன:

- மருந்தாக்க உபதுறை: சகல விதமான மருந்துகளையும் உற்பத்தி செய்வதற்காக 400 ஏகர் வலயம் உம். உயிர் மருந்துகள், ஊசி போடக்கூடியவை, ஏபீஐ (API) கள், ஊட்டச்சத்து மருந்துகள் போன்றவையாகும்.
- மின்னணுவியல் மற்றும் மின் உபதுறை: கிறபைற் மற்றும் கிறபீன் அடிப்படையிலான உற்பத்திகள், உணரிகள் (sensors), ஆழிகள், இணையங்களின் (IOT) சாதனங்கள், அச்சிடப்பட்ட சுற்று பலகைகள் (PCBs), மின் மையப் பலகைகள் மற்றும் கைதொலைபேசிகள் போன்றவை எதிர்கால தொழில்நுட்ப தளங்களின் அனுகூலங்களை எடுக்கின்றன.
- தளவாடங்கள், பிராந்திய தஅ கள், நிதிசார் சேவைகள், வர்த்தகம், கடல்வழி மற்றும் பல்கலைக்ககழகங்கள் போன்ற உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் என்பன வளர்ந்துவரும் நுகர்வோர் பொருளாதாரத்திற்கும், விரிவடையும் உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகளை விரிவாக்குவதற்கும் ஆதரிக்கப்பட வேண்டும்.

# 2021 இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கொள்கை ஆரம்பவேலை

## 1. மருந்தாக்க உற்பத்தி வலயம் தாபித்தல் - அரபொக்க, அம்பாந்தோட்டை

மருந்தாக்க கைத்தொழில் உற்பத்தி, உள்ளூர் வழங்கல் மூலம் பொதுமக்களுக்கு தரமான மருந்துகளை வழங்குவது மூலமும், ஏற்றுமதிகள் மூலம் அந்நிய செலாவணியை சம்பாதிப்பதன் மூலமும் இலங்கைக்கு அளவிடமுடியாத பொருளாதார மற்றும் சமூக அனுகூலங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான கைத்தொழிலென அடையாளம் காணப்பட்டதால் கலைநிலை மருந்தாக்க வலயம் ஒன்று தாபிப்பது உலகப் பெயர்பெற்ற முதலீட்டாளர்களைக் கவர்வதற்கான ஒரு மூலோபாய அபிவிருத்தித் திட்டமாக இமுச இனால் ஆரம்பிக்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட மருந்தாக்க வலயம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரபொக்க இமுச வலயத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், 400 ஏக்கர் பரப்பில் ஒவ்வொன்றும் 200 ஏக்கர்களாக இரண்டு மட்டங்களில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. திட்டத்தின் முதலாவது கட்டமாக 20 மருந்தாக்க கம்பனிகளுக்கு இடமளிக்க 200 ஏக்கர் காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை இரண்டாவது கட்டமாக மேலும் 200 ஏக்கருக்குள் 20 மருந்தாக்க உற்பத்திக் கம்பனிகள் அமைக்கப்படும்.

முன்மொழியப்பட்ட மருந்தாக்க வலத்தை ஒரு மூஅதி (SDP) ஆக அறிவிப்பதற்கான நடவடிக்கை ஏற்கெனவே பூர்த்தியாகி உள்ளதுடன், அதற்கான பாராளுமான்ற அங்கீகாரம் 2021 ஆகஸ்ட் 19 அன்று வழங்கப்பட்டுள்ளது.

மூஅதி சட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்புகள், வலயத்திற்குள் தாபிக்கப்படும் மருந்தாக்க கம்பனிகளுக்கும் பொருந்துமென பின்வருமாறு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது:

### • கூட்டாண்மை வருமான வரியிலிருந்து (CIT) விதிவிலக்கு

அ. ஏற்றுமதி மூலம் ஏற்பட்ட வருமானத்திற்கு (ஏற்றுமதிகளென கருதப்படுவன அடங்கலாக);

முன் வரையறுக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் குறைந்தது 5 வருடங்கள் முதல் அதிகூடியதாக 10 வருடங்கள் வரைக்கும் வரி விடுமுறை வழங்கப்படும்.

மேற்கூறிய வரி விடுமுறை காலாவதியாகிய பின்னர் தொழில்முயற்சிக்குக் கிடைக்கும் இலாபத்தைப் பொறுத்து, அந் நேரத்தில் பொதுவாகவுள்ள கூட்டாண்மை வருமான வரி விகிதம் ஏற்றுமதியாளர்களுக்குப் பொருந்தும்.

ஆ. உள்ளூர் சந்தைக்கு விற்பனை முலம் இறக்குமதிக்கு மாற்றாக ஏற்படுத்தப்பட்ட வருமானத்திற்கு;

அந் நேரத்தில் ஏற்றுமதியாளர்களுக்குப் பொருந்தும் பொதுவாகவுள்ள சலுகை கூட்டாண்மை வருமான வரி விகிதம் முன் வரையறுக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் குறைந்தது 5 வருடங்கள் முதல் அதி கூடியதாக 10 வருடங்களுக்கு வழங்கப்படும்.

மேற்கூறிய வரி விலக்கு காலம் காலாவதியான பின்னர் அந்த நேரத்தில் பொதுவாகவுள்ள கூட்டாண்மை வருமான வரி விகிதம் அந் நேரத்தில் தொழில்முயற்சி மூலம் கிடைக்கும் இலாபத்தைப் பொறுத்து உற்பத்தியாளர்களுக்குப் பொருந்தும்

### • இறக்குமதி வரிகள் மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்கு

அ. திட்டம் அமுல்படுத்தும் காலத்தில் கட்டுமானம் தொடர்பான பொருட்களின் இறக்குமதிக்கு

- சகல வரி மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்கு (சுங்க வரி, துஅதீ (PAL), செஸ் (CESS), பெசேவ (VAT)

ஆ. மூலதனப் பொருட்களின் இறக்குமதிக்கு (பொறித்தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள்)'

- சகல வரி மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்கு (சுங்க வரி, துஅதீ (PAL), செஸ் (CESS), பெசேவ (VAT)

இ. மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி / செயல்முறை தொடர்பான நுகர்பொருட்களின் இறக்குமதிக்கு

(உள்ளூர் சந்தைக்கு விற்பனை மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு மாற்றாக கருதப்பட்ட உற்பத்தி மற்றும் ஏற்றுமதி இரண்டுக்கும்)

- சகல வரி மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்கு (சுங்க வரி, துஅதீ (PAL), செஸ் (CESS), பெசேவ (VAT)

### • வெளிநாட்டவர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு

## 2. புடவை உற்பத்தி வலயம் தாபித்தல் - ஏறாவூர்

ஏறாவூரில் உள்ள முன்மொழியப்பட்ட கைத்தொழில் வலயமானது உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தை இரண்டினதும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 200 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் ஒரு துணி உற்பத்திப் பூங்காவாகத் தாபிக்கப்பட்டது. இந்த வலயம் துணி இறக்குமதிக்கான அந்நிய செலாவணி வெளிப்பாய்ச்சலைக் குறைப்பதன் மூலமும், மூலப் பொருட்களை ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் மேம்படுத்தப்பட்ட விநியோக வேகத்துடன் சரியான தருணத்தில் வழங்குவதன் மூலமும் பெரிய அளவிலான வாய்ப்பை நாட்டிற்கும், தைத்த ஆடைத் தொழிற்சாலைக்கும் உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது இருதரப்பு மற்றும் ஒருதலைப் பட்ச ஒப்பந்தங்களை (EU GSP+, ISFTA, SLPFTA) மூல விதிகளை நிறைவேற்றுவதன் மூலம் தைத்த ஆடைகள் உற்பத்தியாளர்கள் சலுகைகளுக்கு தகுதியுடையவர்களாக ஆகுவதற்கு வழி வகுக்கும்.

செயல்முறையை வேகமாக்கி, வலய செயற்பாட்டை 2021 இல் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே ஒரு முதலீட்டாளர் டொ 35 மிலி மூலதனத்தை முடக்கியுள்ளதுடன், ஏனைய 3 - 4 முதலீட்டாளர்கள் ஏறாவூரில் துணி ஆலைகளை நிறுவுவதற்கான தங்களுடைய ஆர்வத்தைத் தெரிவித்துள்ளனர். மேலும், 2025 ஆம் ஆண்டிலிருந்து மேலதிகமாக 65 ஏக்கர்கள் ஏறாவூர் வலயத்தில் திட்டங்களுக்காகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த புடவை உற்பத்தி வலயம் மூலோபாய அபிவிருத்தித் திட்டமென அறிவிக்கப்பட உள்ளதுடன், மூஅதி சட்டத்தின் கீழ் 3.2, 3.4 வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளதுடன், பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கிறது.

மூஅதி சட்டத்தின் கீழ், முன்மொழியப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்புகள் வலயத்திற்குள் தாபிக்கப்படவுள்ள புடவை உற்பத்தி கம்பனிகளுக்குப் பொருந்தக்கூடியவை, பின்வருமாறு வர்த்தமானி அறிவித்தலாக வெளிவந்துள்ளது:

### • கூட்டாண்மை வருமான வரியிலிருந்து (CIT) விலக்கு

முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு வரம்பு அடிப்படையில் குறைந்தது 5 வருடங்கள் முதல் அதிகூடியதாக 10 வருடங்கள் வரைக்கும் வரி விடுமுறை வழங்கப்படும்.

மேற்கூறிய வரி விடுமுறை காலம் காலாவதியாகிய பின்னர் அந் நேரத்தில் ஏற்றுமதியாளர்களுக்குப் பொருந்தும் கூவவ (CIT) இன் 50% மேற்கூறிய வரம்பின் அடிப்படையில் 2-5 வருடங்களுக்குப் பொருந்தும்.

### • இறக்குமதி வரிகள் மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்கு

அ. திட்டம் அமுல்படுத்தும் காலத்தில் கட்டுமானம் தொடர்பான பொருட்களின் இறக்குமதிக்கு

- சகல வரி மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்கு (சுங்க வரி, துஅதீ (PAL), செஸ் (CESS), பெசேவ (VAT)

ஆ. மூலதனப் பொருட்களின் இறக்குமதிக்கு (பொறித்தொகுதி, இயந்திரங்கள், உபகரணங்கள்)‘

- சகல வரி மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்கு (சுங்க வரி, துஅதீ (PAL), செஸ் (CESS), பெசேவ (VAT)

இ. மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி/செயல்முறை தொடர்பான நுகர்பொருட்களின் இறக்குமதிக்கு

(உள்ளூர் சந்தைக்கு விற்பனை மூலம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு மாற்றாக கருதப்பட்ட உற்பத்தி மற்றும் ஏற்றுமதி இரண்டுக்கும்)

- சகல வரி மற்றும் தீர்வைகளிலிருந்து விலக்கு (சுங்க வரி, துஅதீ (PAL), செஸ் (CESS), பெசேவ (VAT)

### • வெளிநாட்டவர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு

## 3. பெரிய அளவிலான ரயர் உற்பத்தி திட்டத்திற்காக மூஅதி அந்தஸ்து பெற்றுக்கொள்ளல்

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்குள் 121 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் ரயர் உற்பத்தி பொறித்தொகுதி ஒன்றை அமைப்பதற்காக 2020 நவம்பரில் சிலோன் ரயர் மனுபக்சரிங் கம்பனியினால் இமுச உடன் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்தத் தொழிற்சாலை தனது செயற்பாடுகளை மூன்று வருடங்களில் ஆரம்பிக்க உள்ளதுடன், 2,000 நேரடி வேலை வாய்ப்பையும் உருவாக்கும். முதலாவது கட்டத்தில் அது பாதி எஃகு றேடியல் ரயர்களையும், லாரிகள், பஸ் வண்டிகள், பிரயாணிகளின் மோட்டார்வண்டி என்பவற்றிற்கு வேண்டிய சகல எஃகு றேடியல் ரயர்களையும் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதுடன், திறனில் ஒன்பது மிலியன் ரயர்களை ஏற்றுமதி செய்யும். உயர் பக்கத்தோற்ற திட்டமாகக் கருதப்படும் இந்த ஐஅ $300 மிலி வெளிநாட்டு நேரடி முதலீடு மூலோபாய அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் ஒரு மூலோபாய அபிவிருத்தித் திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4. ஒரு முன்னணி உலகளாவிய ததொதொ திட்டத்திற்கு மூஅதி அந்தஸ்து பெற்றுக்கொள்ளல்

எச்சீஎல் ரெக்னோலொஜிஸ் (HCL Technologies) என்ற முன்னணி உலகளாவிய தொழில்நுட்ப கம்பனி மென்பொருளை அபிவிருத்தி செய்வதுடன், ஏற்றுமதி சந்தைக்கு ததொ சம்பந்தமான சேவைகளை வழங்குவதற்காக ஐஅ $10.25 மிலி முதலீட்டை எதிர்பார்க்கும் திட்டம் ஒன்றை அமைப்பதற்கு ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. எச்சீஎல் அடுத்த தலைமுறை தீர்வுகளை வழங்கி, பெரிய புளூசுத் நிறுவனங்களுக்கு சேவை செய்வதில் ஆரம்ப கவனம் செலுத்தி, அதன் செயற்பாட்டை 2020 அக்டோபரில் ஆரம்பித்ததுடன், அதன் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு தொழில்துறை செங்குத்துக்களில் சேவை செய்யும்: ஏனையவற்றின் மத்தியில் வாழ்க்கை அறிவியல் மற்றும் சுகாதாரம், வங்கியியல், நிதிசார் சேவைகள் மற்றும் காப்புறுதி, டெலிகொம், சில்லறை விற்பனை, நுகர்வோர், வெளியீடு, சக்தி மற்றும் பயன்பாடு கைத்தொழில்கள் என்பன அடங்கும்.

எச்சீஎல் எதிர்வரும் மூன்று முதல் ஐந்து வருடங்களில் ஏறத்தாழ 3,500 வேலை வாய்ப்புக்களை உருவாக்க திட்டமிட்டுள்ளதுடன், 2029 அளவில் 9,000 ஆக அதிகரிப்பதற்கு எதிர்பாத்துள்ளது. அவர்களுள் 1,500 ஊழியர்கள் ஆரம்பத்தில் இலங்கையில் வேலை செய்வதற்கு ஆரம்பிப்பார்கள்.

மூஅதி சட்டத்தின் கீழ் எச்சீஎல் ஐ ஒரு மூலோபாய அபிவிருத்தி திட்டமாக அறிவிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 5. இலங்கை முதலீட்டு மன்றம் 2021

'இலங்கையில் முதலீடு – ஆசியாவின் அடுத்த வளர்ச்சி புகலிடம்' என்ற கருப்பொருளின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் இலங்கை மூலதன சந்தையில் வெநேமு வாய்ப்புக்களையும், முதலீட்டையும் ஊக்குவிப்பதற்காக, இலங்கை முதலீட்டுச் சபை (இமுச), கொழும்பு பங்குச் சந்தை (கொபச), இலங்கை வர்த்தக சம்மேளனம் (கொவச) என்பன இணைந்து, இலங்கை முதலீட்டு மன்றம் 2021 நடாத்தப்பட்டது.

மெய்நிகர் நிகழ்வு 2021 ஜுன் 7ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை இடம்பெற்றதுடன், இலங்கையில் திட்டங்களில் வெநேமு முழுவதுக்குமான, தனியார் பங்கு வேலைவாய்ப்பு, பட்டியலிடப்பட்ட கூட்டாண்மைகளில் முதலீடு என கவர்ச்சியான முதலீட்டு வாய்ப்புக்களின் முன்னோட்டத்தை வழங்கியது. மன்றமானது மூத்த அரச தலைவர்கள், பொது மற்றும் தனியார் கம்பனிகளில் உயர் தலைமைத்துவம், உலகளாவிய நிபுணர்கள், முதலீட்டு வங்கியாளர்கள், மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் என்பவர்களின் அமர்வுகள் மற்றும் விளக்கக்காட்சிகளை உள்ளடக்கியதாகும்.

40 ஒப்புரவு கூட்டு வாய்ப்புக்களுடன், ஐஅ $5 பிலி. க்கு மேலான 40 க்கும் மேற்பட்ட பாரிய அளவிலான வெநேமு திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வு 4,500 + பதிவுசெய்தலைக் கவர்ந்ததுடன், அதில் 1,900 + முதலீட்டாளர் பக்கத்தோற்றங்கள் அடையாளம் காணப்பட்டன. வருங்கால முதலீட்டாளர்கள் மற்றும் திட்டச் சொந்தக்காரர்களுக்கிடையே 150 நேருக்கு நேர் சந்திப்புக்களுக்கு வசதியளிக்கப்பட்டன.

## 6. ஏனைய முயற்சிகள்

அம்பாந்தோட்டை, ஹேனெகம, மற்றும் சூரியவேவா மற்றும் மிரிஞ்ஜாவிலவில் முறையே விவ-பதனிடுதல், மின் மற்றும் மின்னணுவியல் உபகரணங்கள். எஃகு மற்றும் கனரக தொழிற்சாலை என்பவற்றுடன் ததொதொ (ICT) துறைகளில் கவனம் செலுத்தி நான்கு வலயங்கள் தாபிப்பதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட வலயங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக தேவையான பாதீடு ஒதுக்கீட்டிற்காக 2022 க்கான பாதீடு முன்மொழிவு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# எங்கள் மக்கள்

## மனித மூலதனம்

நிறுவனத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லும் மத்திய படை எங்கள் மக்கள் என்றே நாங்கள் கருதுகிறோம். எங்களுடைய குழு பொது சேவைக்கான வலுவான உணர்வினைப் பகிர்ந்துகொள்ளும் ஊழியர்களைக் கொண்டதாகும். இமுச இன்று ஒரு உறுதியான நிறுவனமாக பரிணாமம் பெறுவதற்கு கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக அவர்களுடைய கூட்டு அர்ப்பணிப்பும், விட்டுக்கொடுப்புமே அத்திவாரமாக அமைந்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபை பல்வேறு அணி ஊழியர்களைக் கொண்டுள்ளது. அதன் ஆரம்ப காலமான 1978முதல் இமுச பல்வேறு பின்னணிகளைக் கொண்ட மக்களுக்கு வாய்ப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்து வழங்குகிறது.

முதலீட்டு ஊக்குவிப்புடன், முறைப்படுத்துதல் மற்றும் ஆதரவு சேவைகள் என்பன மைய செயற்பாடாக இருப்பதுடன், சபை தொடர்ந்து அரச மற்றும் அரச சார்பு துறைகளில் ஒரு நம்பிக்கைக்குரிய தொழிலை உருவாக்க விரும்புகின்றவர்களுக்கு தொடர்ந்தும் ஒரு விரும்பிய உணர்வைக் கொடுக்கிறது.

## மக்கள் முகாமைத்துவத்திற்கான இமுச இன் அணுகுமுறை

இமுச வலுவான மக்களை மையப்படுத்திய நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறது. சகல ஊழியர்களும் தொழில் வளர்ச்சி, ஊழியர் ஆதரவு மற்றும் தொழில்துறை அபிவிருத்தி சம்பந்தமாக நியாயமான, சம வாய்ப்பைப் பெறுவதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

எங்களுடைய மக்கள் முகாமைத்துவ நடைமுறைகள், ஊழியர்களுக்கு சபையில் அவர்கள் தொழில் பார்க்கும் காலம் முழுவதும் தொடர்ந்த ஆதரவை உறுதிப்படுத்துகிறது. மக்கள் முகாமைத்துவ தொழிற்பாடுகளும், அவை சார்ந்த நடைமுறைகளும் அமுல்படுத்தப்பட்டு, மையமாகக் கண்காணிக்கப்படுகிறது.

இமுச இன் மக்கள் முகாமைத்துவ கடமைகளாவன, ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு முதல் மனித வள அபிவிருத்தி, நலன்புரி, மற்றும் ஒழுங்குமுறை வரையாகும். மக்கள் முகாமைத்துவ நடைமுறைகளை நிறைவேற்றும்போது சமத்துவம், பக்கச்சார்பின்மை மற்றும் நெறிமுறை என்பவற்றைச் செய்துகாட்டுவதை நாங்கள் வலியுறுத்துகிறோம். முதலீட்டுச் சபை அரச சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் கொள்கைத் தீர்மானங்களால் ஆளப்படுகின்றது. இந்த வரம்புகளுக்குள் மக்கள் முகாமைத்துவ நடைமுறைகள், ஊழியர் உற்பத்தித் திறனுடன், வேலை திருப்தியும் சரியான இடத்தில் உள்ளதை உறுதிப்படுத்துகிறது.

தேசிய பொருளாதாரத்தில் இலங்கை முதலீட்டுச் சபை முக்கிய பங்காற்றி வருகிறது. மொஉஉ(GDP) க்குப் பங்களிக்கும் சில குறிப்படத்தக்க தேசிய நிறுவனங்களில் ஒன்று என்பதால், எங்களுடைய ஊழியர்கள் இலங்கை நாட்டு மக்களின் பொருளாதார மற்றும் சமூக நல்வாழ்வு சம்பந்தமாக தங்களுடைய பொறுப்புக்களை நன்கு அறிந்திருக்கிறார்கள்.

மக்கள் முகாமைத்துவ கடமைகள் அனைத்தும் ஊழியர்கள், தேசத்தின் மீதான தங்களுடைய பொறுப்பை நிறைவேற்றவேண்டும் என்ற இலக்கை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டது. இந்தக் கடமைகள் அனைத்தும் நிலையானதன்மை மற்றும் நம்பகத்தன்மையின் அடிப்படையில் அரச நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளினால் வழிநடத்தப்படுகின்றன.

ஒரு வெளிப்படையான நடைமுறை மூலம் ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு ஊடாகச் சரியான திறமை கவரப்படுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம். மனித வள அபிவிருத்தியும் நலன்புரி கடமைகளும் ஊழியர்கள் இருப்பு, தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சி என்பன சம்பந்தமாக போதிய ஆதரவைப் பெறுவதை உறுதிப்படுத்துகிறது.

அனைத்து ஆதரவு அமைப்புக்களுடனும் எங்களுடைய ஊழியர்கள் எப்பொழுதும் பொறுப்புடனும், ஒழுக்கமுறையுடனும் தொடர்ந்து தங்களை நடத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். இமுச இன் மதிப்புகளுக்கு ஏதேனும் சாத்தியமான இடையூறுகளைத் தணிப்பதற்காக தவறான நடத்தை உடனடியாகக் கவனிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு வலுவான ஒழுக்கக் கொள்கைகள் நடைமுறையில் எங்களிடம் உள்ளன.

## மனித வளங்கள் கொள்கைகள்

இமுச இற்குள் சகல மனித நடைமுறைகளும் மூன்று விரிவான கொள்கைகளினால் ஆளப்படுகிறது. இக் கொள்கைகள் ஒவ்வொரு மனித வள கடமையின் கீழும் சபை பின்பற்றவேண்டிய மிகச் சிறந்த நடைமுறைகளைப் பரிந்துரை செய்கின்றன.

### ◈ மனித வள கொள்கை கைநூல்

மனித வள கொள்கை கைநூல் ஆட்சேர்த்தல், தெரிவு, தகுதிகாணல் மற்றும் பதவியை உறுதிப்படுத்துதல், ஊதியம், வேலை நேரங்கள், வரவு மற்றும் விடுமுறைகள், செயலாற்றுகையை மதிப்பிடல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பன சம்பந்தமான சகல நடைமுறைகளிலும் அதிகாரம் செலுத்துகிறது.

புதவிஉயர்வு, இடமாற்றம், மற்றும் பதவி இறக்கம், வேலைக்கான நிபந்தனைகள், குறைகள், மற்றும் தொழிற் சங்கங்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய வழிகாட்டல்களை கொள்கை மேலும் வழங்குகிறது. இந்தக் கைநூலைப் பின்பற்றுவது ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மையை உறுதிசெய்கிறது. பணிப்பளர் சபையின் விசேட ஒப்புதலின் கீழ் நியாயமான விலகல் நிகழும்வரை நாங்கள் மனித வள கொள்கை கைநூலிலுள்ள வழிகாட்டல்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்கிறோம்.

### ◈ ஆட்சேர்ப்பு திட்டம்

ஆட்சேர்ப்பு கடமையின் கீழுள்ள சகல நடைமுறைகளும் இமுச இன் ஆட்சோப்பு திட்டத்தைப் பின்பற்றி செயற்படுத்தப்படுகிறது. உள்வாரியாக அல்லத வெளிவாரியாக திறமைகளை உள்வாங்கும்போது பின்பற்றவேண்டிய வழிகாட்டல்களும், கருத்தில் கொள்ளவேண்டிய பிமாணங்களும் திட்டத்தில் உள்ளன.

### ◈ ஒழுக்காற்று விதி

இமுச இற்குள் தொழிலாளுமை மற்றும் பலமான பணி நெறிகளை நாங்கள் ஊக்குவிக்கிறோம். நாங்கள் எங்களுடைய முக்கிய விழுமியங்களை எப்போதும் நிலைநாட்டுவதில் உறுதிபூண்டுள்ளோம். இமுச இன் ஒழுக்காற்று விதி ஊழியர்களின் நெறிமுறை நடத்தை தொடர்பான சிறந்த நடைமுறைகள் குறித்த பரிந்துரைகளை வழங்குகிறது. “நடத்தை விதி” மற்றும் “ஒழுக்காற்று சட்ட செயல்முறை” யின் கீழான ஒழுக்காற்று விதி சபையின் ஊழியர்களின் தவறான நடத்தை அல்லது தவறு சம்பந்தப்பட்ட எந்தவொரு சம்பவத்திலும் பின்பற்றவேண்டிய தேவையான செயற்பாட்டை வழங்குகிறது.

## எங்களுடைய மக்களின் அமைப்பு

எங்களுடைய அணி கொழும்பிலுள்ள தலைமையகம் மற்றும் ஏற்றுமதி செயலாக்க வலயங்கள்/பூங்காக்கள்/நாடெங்கிலும் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்கள் என்பவற்றைச் சேர்ந்தவர்களென மொத்தமாக 1262 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

இமுச அமைப்பு குறிப்பாக மூன்று தொழிலாளர் பிரிவுகளாலானது. முழு அணியின் பெரும்பாலானது 47% நிறைவேற்றதிகாரி பிரிவைப் பிரதிநிதிப்படுத்துகின்றது. நிறைவேற்றதிகாரிகள் பிரிவில் அல்லாதோர் முகாமைத்துவ உதவியாளர்கள், மற்றும் ஆரம்ப நிலை தர பணியாளர்களாவார்கள். முழு அணியினதும் 22% ஆனவர்கள் முகாமைத்துவ உதவியாளர்களும், 31% ஆனவர்கள் ஆரம்ப நிலை தர பணியாளர்களாவார்கள்.

நாங்கள் எங்களுடைய ஊழியர்களுக்கிடையே ஒரு சிறந்த பாலின சமநிலையைத் தொடர்ந்து பேணுகிறோம். வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் சம வாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எமது அணியில் 34% பெண் ஊழியர்களைப் பிரதிநிதிப்படுத்தும் அதேவேளை 66% ஆண் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. முகாமைத்துவ பதவிகளில் பெண்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அடிப்படையில் நாங்கள் தொடர்ந்து முன்னேற்றத்தை அவதானிக்கிறோம். எமது அணியில் 136 கனிஷ்ட முகாமையாளர்களும், 123 மத்திம முகாமையாளர்களும், 24 சிரேஷ்ட முகாமையாளர்களும் பெண்களாவார்கள். இமுச இல் 36 சிரேஷ்ட முகாமையாளர்கள், பிரிவுகள் மற்றும் ஏற்றுமதி செயலாக்க வலயங்களுக்குத் தலைவர்களாக, இருக்கிறார்கள். அவர்களுள் 17% பெண்களாவார்கள். அதேவேளை பொரும்பாலான 83% ஆண்களாவார்கள். ஒரு முற்போக்கான நிறுவனத்திற்கு பாலின பன்முகத்தன்மை முக்கியமானது என்று நாங்கள் நம்புவதால் இமுச இற்குள் தலைமைத்துவ பதவிகளில் மேலும் பெண்களை எடுததுக்கொள்வதை நாங்கள் ஊக்குவிப்பதற்கு எண்ணுகிறோம்.




எங்களுடைய அணி பல்வேறு கல்விசார் மற்றும் தொழில்துறை பின்னணிகளைக் கொண்டுள்ளது. பன்முகத்தன்மையான அவர்களுடைய அறிவு தொடாந்தும் சபைக்கு பாரியளவில் நன்மையளிக்கிறது. 400 க்கு மேற்பட்ட பட்டதாரிகளும், 240 க்கு மேற்பட்ட முதுமானி பட்டம் பெற்றவர்களும் எங்களிடத்தில் இருக்கின்றனர். வணிக நிர்வாகம், விஞ்ஞானம், கலை, பொறியியல், பொது முகாமைத்துவம், கணக்கியல், சமூக விஞ்ஞானம், மற்றும் சுங்க நிர்வாகம் அடங்கலாக பல்வேறு கல்விசார் பின்னணியைக் கொண்ட ஊழியர்கள் எங்களுடைய திறன் குழுவில் இருக்கின்றனர். மேலும் தொழில்துறை நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றவர்கள் 59 பேர் இருக்கிறார்கள்.

விசேஷமாக நாங்கள் ஈடுபட்டுள்ள வேகமாக மாறுகின்ற, தீவிரமான போட்டி வணிகத்தில் தொடாச்சியாக தொழில்துறை அபிவிருத்தி அதி முக்கியத்துவம் வாய்ந்ததென நாங்கள் நம்புகிறோம். ஊழியர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கும், தொடர்ந்து தொழில்துறை அபிவிருத்திக்கும் ஆதரவு அளித்து, ஊக்குவிப்பதற்காக கொள்கைகளை (பரந்த அனுசரணை கொள்கைகள், விடுமுறை கொள்கைகள் மற்றும் பதவிஉயர்வு) சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

## மனித வள பாகம்

உலகளாவிய தொற்றுநோய் நாட்டைத் தாக்கியதிலிருந்து எங்களுடைய வளர்ச்சி பயணம் மேலும் சவாலானதாகவும், கடினமானதாகவும் ஆகியுள்ளது. பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெழுப்பும் அடிப்படையில் நாடு முதலீட்டுச் சபையில் அதிகளவு தங்கியுள்ளது.

சிறந்தவற்றை வழங்குவதற்கு எங்களுடைய மக்களுக்கு ஆதரவளிக்கும் சவாலான பணிக்கு மனித வளமாக, நாங்கள் பொறுப்பாகும். புதிய இயல்புநிலைமையை முற்றாகத் தழுவுவதற்கு இந் நேரத்தில் நாங்கள் முயற்சிக்கிறோம். ஊழியர்களுக்கு உயர்ந்த மதிப்புகளை வழங்குவதற்கு அதன் பங்கை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை மவ தொடர்ந்து ஆராய்கிறது. நாங்கள் தொடர்ந்து மேலும் சுறுசுறுப்பானதும், நெகிழ்வானதுமான வேலை நடைமுறைகளை விருத்திசெய்து, திறனைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தி, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை மேம்படுத்தி, ஊழியர்கள் சிறந்த பதிப்புகளாக வளர்வதற்கு சிறந்த மேடை அமைத்துக் கொடுப்போம்.

# கூட்டாண்மை சமூகப் பொறுப்பு

ஒரு வணிகமானது, வியாபார அடையாளத்தை மேம்படுத்துவதுடன், சமூக மற்றும் சூழல் பிரச்சனைகள் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேளை, சிறந்த நெறிமுறை நடைமுறைகளுக்கும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கும் சமூகப் பொறுப்புடன் நடத்தும் ஒரு வழியை கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (கூசபொ) எடுத்துக் காட்டுகிறது.

நிறுவனங்களை கூசபொ நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்கும் அதேவேளை, இமுச தன்னையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பன்முகத்தன்மை, தொழிலாளர் நடைமுறைகள் மற்றும் தன்னார்வத்தொண்டு போன்ற கூட்டாண்மைப் பொறுப்பின் பல்வேறு தூண்களில் ஈடுபடுத்துகிறது.

## உற்பத்தி தொழில்முயற்சிகள் முகம்கொடுக்கும் தொழிலாளர் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

இமுச அதன் தொழில்முயற்சிகள் தெரிவித்த தொழிலாளர் பற்றாக்குறையை இலக்குவைத்து, பின்வருவன போன்ற பல்வேறு வேலைகளை ஆரம்பித்துள்ளது:

### ❖ இமுச வேலை வங்கி நுளைவு

சமூகப் பொறுப்புக்கான ஒரு நடவடிக்கையாக வேலை சந்தையில் கிடைக்கும் வாய்ப்புக்களை பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் ஒரு இலவச சேவையாக இமுச 2021 அக்டோபரில் வேலை வங்கி நுளைவைத் தொடங்கியது.

### ❖ ஊழியர்கள் சேவைகள் பிரிவுகள் (ஊசேபி கள்)

தொழில் வெற்றிடங்கள் உள்ள இடங்களில் தொழில்முயற்சியாளர்களின் முகாமைத்துவ பிரதிநிதிகளும், தொழில் தேடுவோரும் சந்திப்பதற்கு ஒவ்வொரு வலயத்திலும் ஊழியர்கள் சேவைகள் பிரிவுகள் (ஊசேபி கள்) ஏற்படுத்தி, செயற்பட்டு வருகின்றன. ஊசேபி கள் கொவிட்-19 தொற்றுநோய் முதலாவது அலை நீங்கிய பின்னர் செப்டம்பர் 2020 இல் தமது செயற்பாடுகளை மீளத் தொடங்கின.

### ❖ பகற்காப்பு நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளைத் தாபித்தல்

பகற்காப்பு நிலை யங்கள் மற்றும் முன்பள்ளிகளைத் தாபித்தல் ஊழியர்கள் தங்களுடைய குழந்தைகளை வலயங்களுக்குள் ஒரு பாதுகாப்பான இடத்தில் தங்கவிட்டு, தங்களுடைய தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு விரும்புகின்றவர்களுக்கு ஒரு உறுதியான தீர்வை வழங்குவதாக உள்ளது. இது உயர்ந்த அளவிலான தொழில் பிறழ்வைக் குறைத்துள்ளதுடன், புதிதாகச் சேர்ந்துகொள்கின்றவர்களுக்கு வலயங்களைப்பற்றி கவரக்கூடிய அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. கட்டுநாயக ஏசெவ, பியகம ஏசெவ மற்றும் மாவத்தகம ஏசெவ ஆகியவற்றிலுள்ள பகற்காப்பு நிலையங்கள் செப்டம்பர் 2020 முதல் சேவையை மீளத் தொடங்கின.

கஷ்டமான நேரங்களில் நிறுவனங்கள் தங்களுடைய கூட்டாண்மை பொறுப்புக்களை சமூகத்திற்கு மிகவும் துரிதமாக நிறைவேற்றுவதற்கான தேவை ஏற்படுகிறது. கொவிட்-19 கூட்டாண்மைத் துறையில் தயாளதன்மைக்கான களத்தை அமைத்தது.

கொவிட்-19 தொற்றுநோய் காலம் முழுவதும் பல நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களினதும், கொவிட்-19 தொற்றுநோய்க்கு எதிராக முன்னணியில் நின்று பணியாற்றியவர்களினதும் வாழ்வை உயர்த்துவதற்கு தங்களுடைய உற்பத்திகளையும், சேவைகளையும் வழங்கியுள்ளன. இமுச நிறவனங்கள் தபாஉ களை ஆயுத படைகளுக்கும், சுகாதார அதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளன. அநேகமான நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் கவனித்துக்கொள்வதற்காக அவர்களுடைய உலர் உணவுகளையும், வாடகை ஹோட்டல்களில் தங்குமிட வசதிகள் போன்றவற்றையும் வழங்கின. சில தொழில்முயற்சிகள் நாடு முடங்கிய காலத்தில் ஊழியர்களுக்கு முழு சம்பளத்தைக்கூட வழங்கின. அநேகமான தொழில்முயற்சிகள் சுகாதார வழிகாட்டல்களுககு அமைய மேலதிக போக்குவரத்து வசதிகள், சுத்தப்படுத்தல் மற்றும் அணியும் தபாஉ களைத் தங்களுடைய ஊழியர்களுக்கு வழங்குவதற்கு அதிகளவு விலை கொடுத்துள்ளன. மேலும் இந்த தொழில்முயற்சிகள் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைய ஊழியர்களின் பீசீஆர் மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளுக்காக அதிகளவு விலையை இன்னும் செலுத்திக்கொண்டு இருக்கின்றன.

# நிதிசார் விசேட நிகழ்வுகள் - 2021

| 2021 டிஸம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான நிதி சிறப்பம்சங்கள் | 2021 (ரூபா மிலி.) | 2020 (ரூபா மிலி.) | மாற்றம் (%) | 2019 (ரூபா மிலி.) |
|---|---|---|---|---|
| வருமானம் | 4,911 | 4,251 | 15.52 | 4,646 |
| மொத்த செயற்பாட்டு செலவுகள் | (3,788) | (3,591) | (5.49) | (3,773) |
| செயற்பாட்டு இலாபம் | 1,123 | 660 | 70.15 | 873 |
| நிதி வரவு | 330 | 322 | 2.48 | 411 |
| நிதி செலவு | (10) | (14) | 28.57 | (11) |
| வரிக்கு முன்னரான மிகை | 1,443 | 968 | 49.07 | 1,274 |
| வரி செலவுகள் | (79) | (81) | 2.47 | (115) |
| **வரிக்கு பின்னரான மிகை** | 1,363 | 887 | 53.66 | 1,158 |
| ஏனய விரிவான வருமானம் | 82 | (75) | 209.33 | (51) |
| மொத்த விரிவான வருமானம் | 1,445 | 812 | 77.96 | 1,107 |
| வருட முடிவில் நிதி நிலைமை (ரூபா மிலி.) | | | | |
| மொத்த சொத்துக்கள் | 64,533 | 53,127 | 21.46 | 44,158 |
| மொத்த ஒப்புரவு | 62,785 | 51,868 | 21.05 | 42,685 |

## மிகை

2021 ஆம் ஆண்டுக்கான சபையின் வரிக்குப் பின்னரான மிகை 2020 இல் தெரிவிக்கப்பட்ட ரூபா 886.89 மிலி. இலிருந்து 53.73% வளர்ச்சியைப் பதிவுசெய்து, ரூபா1,363.41 மிலி. ஆக அதிகரித்தது. இது இயங்குகின்ற சூழ்நிலையாலும், கொவிட்-19 தொற்றுநோய் காரணமான கஷ்டங்களாலும் ஏற்பட்ட சவால்களின் சூழ்நிலைகளுடன் ஒப்பிடும்போது ஓர் கணிசமான சாதனையாகும்.

**வரிக்குப் பின்னரான மிகை**
**இலங்கை ரூபா மிலி.**




## வருமானம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மொத்த செயற்பாட்டு வருமான வளர்ச்சி 15.52% அதிகரிப்பைப் பிரதிபலித்து, ரூபா 659.88 மிலி. ஆகும். மீளாய்வுக்கான ஆண்டில் செயற்பாட்டு வருமானம் ரூபா 4,911.18 மிலி. ஆக இருந்த அதேவேளை, 2020 ஆம் ஆண்டுக்கானது ரூபா 4,251.30 மிலி. ஆகப் பதிவு செய்யப்பட்டது. நில வாடகை, வருடாந்தக் கட்டணங்கள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சேவைக் கட்டணங்கள், மற்றும் நீரிலிருந்தான வருமானம் என்பனவே சபையின் செயற்பாட்டு வருமானத்திற்குப் பிரதானமாகப் பங்களித்து, மொத்த வருமானத்தின் 92.27% எனக் கணக்கிடப்படுகிறது. இக் காலப்பகுதிக்கான நானாவித வருமானம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 102.79 மிலி. ஆக இருந்ததிலிருந்து 121.31% இனால் அதிகரித்து, ரூபா 227.48 மிலி. ஆகியுள்ளது. இது பிரதானமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளின் காணி கட்டுப்பணத்தையும், பெற்றுக்கொண்ட நஷ்ட ஈட்டையும் ஆண்டுக்கான வருமானமாக அங்கீகரித்ததால் ஆகும்.

**செயற்பாட்டு வருமானம்**
**இலங்கை ரூபா மிலி.**




## செயற்பாட்டு செலவினங்கள்

மொத்த செயற்பாட்டு செலவினங்கள் 2020 இல் ரூபா 3,590.87 மிலி. இலிருந்து 5.49% இனால் அதிகரித்து, 2021 ஆம் ஆண்டில் ரூபா 3,788.18 மிலி. ஆகியது. இது பிரதானமாக 2021 இல் இழப்பீட்டிற்கான ஏற்பாடு 258.31% இனால் அதிகரித்ததனால் ஆகும். செயற்பாட்டு வருமானம் அதிகரித்ததனால் சபையின் செலவு மற்றும் வருமான விகிதம் 2020 இல் 82.25% ஆக இருந்ததிலிருந்து 2021 இல் 72.85% ஆகக் குறைந்தது. ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான செலவுகள் அதிகரித்ததனால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இக் காலப் பகுதிக்கான தேய்மான செலவினங்கள் 4.87% இனால் அதிகரித்தது.

**செயற்பாட்டு செலவினங்கள்**
**இலங்கை ரூபா மிலி.**




## வரிகளுக்கான பங்களிப்பு

இவ் வருடத்திற்கான இமுச இன் மறைமுகமான மற்றும் நேரடி வரிகளுக்கான பங்களிப்பு ரூபா 178.10 மிலி. ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 4.64% வளர்ச்சியாகும். மறுக்கப்பட்ட பெசேவ (VAT) உள்ளீடு ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்பட்டதுடன், அது ரூபா 10.33 மிலி. ஆக அதிகரித்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 11.71% வளர்ச்சியாகும். சபையின் நேரடி வரிகள் வட்டி வருமானம் மீதான வரியை உள்ளடக்கியதாகும்.

**வரி**
**இலங்கை ரூபா மிலி.**



# நிதிசார் கூற்றுக்கள்

(2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது)

2021

## இலங்கை முதலீட்டுச் சபை

## வருமானக் கூற்று

| டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | **4** | **4,911,181,363** | **4,251,299,069** |
| **கழிக்க: செலவினங்கள்** | | | |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | **6** | 286,687,112 | 273,552,379 |
| நிர்வாகச் செலவினங்கள் | **7** | 3,344,826,022 | 3,192,487,029 |
| அரச அறவீடுகள் | **8** | 98,955,130 | 88,787,598 |
| ஏனைய செலவினங்கள் | **9** | 57,713,652 | 36,038,612 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | | 3,788,181,916 | 3,590,865,618 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை** | | **1,122,999,447** | **660,433,451** |
| நிதி வருமானம் | | 329,766,108 | 321,579,138 |
| நிதி செலவினங்கள் | | 10,216,636 | 13,873,362 |
| **தேறிய நிதி வருமானம்** | **10** | **319,549,472** | **307,705,775** |
| **வரிக்கு முன்னரான மிகை** | | **1,442,548,920** | **968,139,227** |
| வரிச் செலவினங்கள் | | 79,143,866 | 81,246,467 |
| **ஆண்டுக்கான மிகை** | | **1,363,405,054** | **886,892,760** |

# இலங்கை முதலீட்டுச் சபை

## விளக்கமான வருமானக் கூற்று

| டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| **ஆண்டுக்கான மிகை** | | **1,363,405,054** | **886,892,760** |
| **ஏனைய விளக்கமான வருமானம்** | | | |
| **கழிக்க**: வரையறுத்த பயன்பாட்டு திட்டம் ஆயுட்கணக்கர்இலாபம்/(இழப்பு) | **21.1** | 81,555,310 | (75,380,123) |
| **ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம்** | | **1,444,960,364** | **811,512,637** |

பக்கம் 40 - 60 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்" நிதிக் கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

## இலங்கை முதலீட்டுச் சபை

### நிதிசார் நிலைமை கூற்று

| டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் | 11 | 16,447,957,171 | 6,159,405,466 |
| முதலீட்டு ஆதனம் | 12 | 38,874,669,885 | 38,854,205,189 |
| தொட்டுணரமுடியாத சொத்துக்கள் - மென்பொருட்கள் | | 1,267,500 | - |
| மூலதன நடைமுறையிலுள்ள வேலை | 13 | 1,164,136,045 | 1,463,837,429 |
| நிதிசார் சொத்துக்கள் | 14 | 574,020,996 | 643,278,444 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | **57,062,051,597** | **47,120,726,528** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | | 16,504,778 | 13,860,225 |
| கைதவிர்த்தலுக்கான வீடுகள் | | - | 2,551,000 |
| நிதிசார் சொத்துக்கள் | 15 | 199,851,910 | 216,873,965 |
| தொழில்முயற்சிகளிலிருந்து கிடைக்கவேண்டியவை | 16 | 318,462,069 | 480,733,989 |
| முற்கொடுப்பனவுகளும், கிடைக்கவேண்டிய ஏனையவையும் | 17 | 529,944,140 | 546,747,679 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 18 | 6,406,252,781 | 4,745,108,178 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **7,471,015,678** | **6,005,875,037** |
| **மொத்த சொத்துக்கள்** | | **64,533,067,276** | **53,126,601,565** |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | |
| **ஒப்புரவு** | | | |
| திரண்ட நிதியம் | | 32,050,723,381 | 20,911,194,024 |
| ஒதுக்கங்கள் | | 15,340,693,234 | 15,340,693,234 |
| | | **47,391,416,615** | **36,251,887,258** |
| ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | 20 | 15,821,737,118 | 16,007,082,111 |
| ஒத்திவைக்கப்பட்ட செலவினம் | 19 | (428,295,356) | (390,763,524) |
| | | **15,393,441,762** | **15,616,318,587** |
| **மொத்த ஒப்புரவு** | | **62,784,858,377** | **51,868,205,846** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய பிரதிலாப கடப்பாடுகள் | 21 | 278,808,543 | 370,952,018 |
| நடைமுறை அல்லாத நிதிப் பொறுப்புக்கள் | 22 | 34,512,895 | 58,969,208 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | **313,321,438** | **429,921,226** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறை நிதிப் பொறுப்புக்கள் | 22 | 24,456,313 | 29,673,285 |
| திரண்ட செலவினங்களும் செலுத்தவேண்டிய ஏனையவையும் | 23 | 1,386,146,594 | 787,247,092 |
| செலுத்தவேண்டிய வரி | | 24,284,555 | 11,554,115 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **1,434,887,461** | **828,474,492** |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | **64,533,067,276** | **53,126,601,565** |

பக்கம் 40 - 60 வரை தயாரிக்கப்பட்டுள்ள “நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்“ நிதிக் கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

இந்த நிதிக் கூற்று தயாரித்தலும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபைக்காகவும், அதன் சார்பாகவும் அங்கீகரித்து, ஒப்பமிடப்பட்டுள்ளது.

| ராஜா ஏ எதிரிசூரிய<br>**தலைவர்** | ஜெயமின் பெல்பொல<br>**சபை அங்கத்தவர்** | ரேணுகா எம்.வீரக்கோன்<br>**பணிப்பாளர் நாயகம்** | எஸ்.ஏ.டீ.டீ.சுரவீர<br>**நிறைவேற்றுப் பணிப்பாளர்-நிதி** |
|---|---|---|---|

24-பெப்-2022

## இலங்கை முதலீட்டுச் சபை

## ஒப்புரவிலுள்ள மாற்றங்கள் பற்றிய கூற்று

## 2021 டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு

| | திரண்ட நிதியம் ரூபா | மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் ரூபா | மொத்த ஒப்புரவு ரூபா |
|---|---|---|---|
| **2020 ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி** | **11,845,461,590** | **15,340,693,234.00** | **27,186,154,824** |
| ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம் | 811,512,637 | - | 811,512,637 |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு | (155,535,700) | - | (155,535,700) |
| தற்காலிக மிகை நிதி மீதி | (3,921,984) | - | (3,921,984) |
| காணி கையகப்படுத்தப்பட்டதால் பெறத்தக்க மறுசீரமைப்பில் தாக்கம் - இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் | 423,360,000 | - | 423,360,000 |
| திறைசேரிக்கான கொடுக்கல் வாங்கல் ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டவை | 134,432 | - | 134,432 |
| அரச உரிமை மூலம் புதிய காணியின் பெறுமதி மதிப்பிடலை அடையாளம் காணல் (பெரீனியல் றியல் எஸ்ரேற் லங்கா | 7,972,383,349 | - | 7,972,383,349 |
| அரசுக்கு அளிக்கப்பட்ட காணிகள் ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டவை | (1,615,000) | - | (1,615,000) |
| கொஏசெவ இல் சொத்து அடையாளம் காணப்படல் | 1,879,000 | - | 1,879,000 |
| அரசு சார்பாக காணிக்கு செலுத்தப்பட்ட முற்பணம் அறவிடல், ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது [6] | (51,500,000) | - | (51,500,000) |
| அரச கொடை - ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்ட காணி -பிகஏசெவ | 112,000,000 | - | 112,000,000 |
| வாடகை அறவிடலின் தாக்கம் ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது | (42,964,300) | - | (42,964,300) |
| **2020 டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி** | **20,911,194,024** | **15,340,693,234.00** | **36,251,887,258** |
| **2021 ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி** | **20,911,194,024** | **15,340,693,234.00** | **36,251,887,258** |
| ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம் | 1,444,960,364 | - | **1,444,960,364** |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு | (415,945,716) | - | **(415,945,716)** |
| வருமானம் சீராக்கல்கள் நேரடியாக ஒப்புரவிலிருந்து அடையாளம் காணப்பட்டவை - விலைப்பட்டியல் ரத்து 2020 [1] | (3,904,116) | - | **(3,904,116)** |
| ஒப்புரவு மூலம் கணக்கியல் முறையில் மாற்றம் காரணமாக வருமானம் அடையாளம் காணல் வஏசெவ வீடமைப்புத் திட்டம். [2] | 1,149,000 | - | **1,149,000** |
| வாடகை வருமானம் அடையாளம் காணல் - 2020 ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது [3] | 14,024,450 | - | **14,024,450** |
| **திறைசேரிக்கான கொடுக்கல் வாங்கல் ஒப்புரவு மூலம் அடையாளம் காணப்பட்டவை 4** | | | - |
| 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகள் மீளப்பெறுதல் 2021 [4.1] | (21,068,786) | - | **(21,068,786)** |
| 2022 ஆம் ஆண்டு பணியாளர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய சம்பளங்களும் படிகளும் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியவை.[4.2] | (51,492,525) | - | **(51,492,525)** |
| வாடகை மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை அறவிடலின் தாக்கம் நேரடியாக ஒப்புரவு மூலம் அடையாளம் காணப்பட்டவை [5] | (11,492,973) | - | **(11,492,973)** |
| திறைசேரிககான கொடுக்கல் வாங்கல்கள் - உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் 6 | (25,584,943) | - | **(25,584,943)** |
| சொத்துககளை அடையாளம் காணல் நேரடியமாக ஒபபுரவு மூலம் [7] | 3,278,034 | - | **3,278,034** |
| காணி கட்டுப்பணம் வருமானம் நேரடியாக ஒப்புரவு மூலம் மீள எழுதப்பட்டது [8] | (35,093,432) | - | **(35,093,432)** |
| அரச கொடை - காணி நேரடியாக ஒப்புரவு மூலம் அடையாளம் காணப்பட்டது- அரபொக்க காணி [9] | 10,240,700,000 | - | **10,240,700,000** |
| **2021 டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி** | **32,050,723,381** | **15,340,693,234.00** | **47,391,416,615** |

**1**. 2020 இல்ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டதனால் வருமான மதிப்பீடு மற்றும் விலைப்பட்டியல் சீராக்கல்களினால் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது.

2. வத்துபிட்டிவல ஏற்றுமதி செயலாக்க வலய வீடமைப்புத் திட்டம் மீதான வருமான அடையாளம் காணல அளவீடுகளில்மாற்றங்களின் விளைவு ஒப்பரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது.

**3**. சபைக்கும், சுற்றுலா அமைச்சுக்குமிடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் 2020 இல் வாடகையிலிருந்து வருமான மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது.

**4. திறைசேரிக்கான கொடுக்கல் வாங்கல்கள் நேரடியாக ஒபபரவு மூலம் அடையாளம் காணப்பட்டது.**

**4.1.** அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய அமைக்கப்பட்ட விசேட பிரிவில் இணைந்துள்ள 09 அதிகாரிகளுக்கு 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சம்பளங்களும், படிகளும் தொடர்பாக திறைசேரியிலிருந்து கிடைக்கவேண்டிய தொகை ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது.

**4.2.** அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய அமைக்கப்பட்ட விசேட பிரிவில் இணைந்துள்ள 08 அதிகாரிகளுக்கு 2022 ஆம் ஆண்டில் வழங்கவேண்டிய சம்பளங்களும், படிகளும் தொடர்பாக திறைசேரியிலிருந்து கிடைக்கவேண்டிய தொகை ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டதுடன், திறைசேரிக்கு கிடைக்கவேண்டியதாக காட்டப்பட்டுள்ளது.

**5.** கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு, வெளிநாட்டு அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களிலிருந்து நிலுவை வாடகை மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை என்பன அரசுடமையின் கீழ் நேரடியாகக் கழிக்கப்பட்டுள்ளது.

**6.** மெகா திட்டங்களுக்கான கட்டமைப்புகளுக்கு வசதியளித்தலுக்காக ஏற்பட்ட செலவினம் ஒப்புரவு கணக்கு மூலம்நேடியாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

**7.** நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாது நேரடியாக அடையாளம் காணப்பட்ட சொத்துக்கள் ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டன.

**8** தகுதிவாய்ந்த அதிகாரியின் ஆதனத்திற்கு எதிராக கிடைக்கப்பெற்ற காணி கட்டுப்பண வருமானத்தில் ஏற்பட்ட விளைவு ஒப்புரவிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்டுள்ளன. இது ஈடுசெய்தலுக்கு எதிரான வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. இது திறைசேரிக்கு அனுப்பப்படும்.

**9**. இலங்கை அரசாங்கம் அரபொக்கவில் 'அமைந்துள்ள 951 ஏக்கர்கள் 2 றூட்கள் 31.2 பாச்சஸ் விஸ்தீரணமுள்ள காணியை ஒரு ஏற்றுமதி செயலாக்க வலயம் அமைப்பதற்காக மாற்றியுள்ளது. காணியின் பெறுமதி அரசஉடமை மூலம் அரச கொடையாக நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. .

**பக்கம் 40 - 60 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்" நிதிக் கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.**

# இலங்கை முதலீட்டுச் சபை

## காசுப் பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2021<br>ரூபா(மிலி.) | 2020<br>ரூபா(மிலி.) |
|---|---|---|
| **செயற்பாட்டு தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | |
| **செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (குறிப்பு 24)** | **1,963.79** | **625.78** |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (66.41) | (92.46) |
| ஓய்வூதிய பிரதிலாப கடப்பாட்டுக் கொடுப்பனவுகள் | (53.69) | (75.57) |
| பெற்றுக்கொண்ட ஒத்திவைக்கப்பட்ட வருமானம் | 343.57 | 300.90 |
| பெற்றுக்கொண்ட கட்டட கட்டுப்பணம் | 40.70 | - |
| பெற்றுக்கொண்ட காணி ஒதுக்கீடு | - | 31.21 |
| **செயற்பாட்டு தொழிற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்கள்/(வெளிப்பாய்ச்சல்கள்)** | **2,227.96** | **789.86** |
| **முதலிடும் தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | |
| பெற்றுக்கொண்ட முதலீட்டு வருமானம் | 296.98 | 347.97 |
| பணியாளர் கடனும், நிதிசார் உதவியும் | 85.38 | 11.12 |
| நிலையான சொத்துக்கள் கொள்வனவு | (36.82) | (45.92) |
| தொட்டுணரமுடியாத சொத்துக்கள் கொள்வனவு | (1.30) | - |
| நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்து வரும்படி | 0.32 | 19.06 |
| நிலையான சொத்துக்கள் விற்பனையினால் ஏற்பட்ட செலவினம் | (0.89) | - |
| மூலதன நடைமுறை வேலை | (448.94) | (570.60) |
| ஒத்திவைக்கப்பட்ட செலவினம் | (6.24) | (3.03) |
| உட்கட்டமைப்பு மெகாதிட்டங்களை எளிதாக்குதல் | (0.06) | - |
| **முதலிடும் தொழிற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்கள்/(வெளிப்பாய்ச்சல்கள்)** | **(111.58)** | **(241.40)** |
| **நிதியிடல் தொழிற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | |
| செலுத்தப்பட்ட குத்தகை தவணைக் கட்டணம் | (39.30) | (42.26) |
| திறைசேரிக்கு நிதியத்தை மாற்றல் | (415.95) | (159.46) |
| மீளளிப்புகள் ரட எல ஹொஏசெவ | - | 0.18 |
| அளவை கட்டணங்கள் முற்பணம் | - | (0.05) |
| மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் இழப்பீடு | - | 60.00 |
| **நிதியிடல் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்கள்/(வெளிப்பாய்ச்சல்கள்)** | **(455.25)** | **(141.59)** |
| காசும், காசுக்கு சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | 1,661.14 | 406.89 |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும் | 4,745.11 | 4,338.22 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் | **6,406.25** | **4,745.11** |

## இலங்கை முதலீட்டுச் சபை

## நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 1. அறிக்கைப்படுத்தும் நிறுவனம்

இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம் 1978 இன் இல. 4 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இந் நிறுவனத்தின் பதிவு அலுவலகமும், பிரதான இடமும் கொழும்பு 1 எசிலன் சதுக்கத்தில் உள்ள உலக வர்த்தக மையத்தின் மேற்குக் கோபுரத்தில் அமைந்துள்ளது.

### 2. தயாரித்தலுக்கான அடிப்படைகள்

#### 2.1 இணக்கக் கூற்று

சர்வதேச கணக்கீட்டுத் தரச் சபையினால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் தரத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்கீட்டுத் தரங்களுக்கு (SLFRS) அமைய நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானம், ஒப்புரவில் மாற்றங்கள், காசுப் பாய்ச்சல் மற்றும் குறிப்புக்கள் சபையின் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.2 மதிப்பீடுகள், நியாயப்படுத்துதல் மற்றும் ஊகங்களை உபயோகித்தல்

சபையின் நிதிசார் கூற்று தயாரிக்கப்படும்போது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் அசாதாரண பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் என்பவற்றில் அந்த அறிக்கையிடப்பட்ட திகதியில் அறிக்கையிடப்பட்ட தொகையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றவற்றிற்கு முகாமைத்துவம் நியாயப்படுத்துதல், மதிப்பிடுதல் மற்றும் ஊகங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த மதிப்பீடுகளும், அடிப்படை ஊகங்களும் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், இந்த ஊகங்களும், மதிப்பீடுகளும் நிச்சயமில்லாததால் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட சொத்துக்களில் அல்லது பொறுப்புக்களில் கொண்டுசெல்லப்பட்ட தொகையில் பொருள் சீராக்கல் மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்படலாம்.

#### 2.3 தொடர்ந்து இயங்கிவரும் நிறுவனம்

நிதிசார் கூற்றைத் தயாரிக்கும்போது சபை தொடர்ந்தும் இயங்குகின்ற ஒரு நிறுவனமாக இருக்கின்ற வல்லமை கொண்டதாக இருப்பதாக முகாமைத்துவம் மதிப்பீடு செய்துள்ளது. சபை தொடர்ந்தும் செயற்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்வதற்குப் போதுமான வளங்கள் எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திற்கு சபையிடம் உள்ளதென்ற நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தையிட்டு கிடைத்த தகவல்கள் அனைத்தையும் கருத்தில் கொள்ளும்போது ஒழிக்கவேண்டிய அல்லது செயற்பாடுகளை நிறுத்தவேண்டிய தேவை எதனையும் சபை எதிர்பார்க்கவில்லை. அதற்கேற்ப சபை தொடர்ந்து இயங்கிவரும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கிறது.

#### 2.4 பாவனையிலுள்ள மற்றும் நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாணயம்

சபையின் பாவனையிலுள்ள நிதி இலங்கை ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், நிதிசார் கூற்றுக்களும் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 3. குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 3.1 நிதிச் சொத்துக்கள்

சபை அதன் நிதிச் சொத்துக்களை கடன்கள் மற்றும் கிடைக்கவேண்டியவையென வகைப்படுத்தியதுடன் நிதிச் சொத்துக்கள் முதலீட்டில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டபோது இந்த வகைப்படுத்தல் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டதுடன், இந்த முதலீடு எந்தத் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டு, பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதுடன், அதன் ஒப்பந்த காசுப் பாய்ச்சல் குணாதிசயங்களிலும் தங்கியுள்ளது.

## (அ) வகைப்படுத்தல்

### (i) கடன்களும், கிடைக்கவேண்டியவையும்

கடன்களும், கிடைக்கவேண்டியவையும் ஒரு தீவிரமான சந்தையில் தெரிவிக்கப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுடனான ஒரு மூலத்திலிருந்து பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். பொதுவான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் கிடைக்கவேண்டியவையும் இவ்வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை இழப்பீடுகளுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

(ii) நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்(முதிர்வடையும்வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்கள்)

நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களாவன ஒரு மூலத்திலிருந்து பெறப்படாததும், நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுடனானதும், நிலையான முதிர்வுகாலத்தைக் கொண்டிருப்பதுடன், சபையின் முகாமைத்துவம் அவற்றை முதிர்வடையும்வரை வைத்திருக்கமுடியுமென்ற சார்பான நோக்கத்தையும், வல்லமையையும் கொண்டுள்ளவையாகும். இந்த நிதிச் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு, வருமானக் கூற்றில் நியாயமான பெறுமதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## (ஆ) இழப்பீடுகள்

எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பீடுகள் ஏதாவது இருக்கின்றனவாவென ஒவ்வொரு ஐந்தொகைத் தினத்திலும் நிதிச் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான அறிகுறி ஏதும் இருப்பின், சொத்தின் அறவிடப்படக்கூடிய தொகை மதிப்பிடப்படும். எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் அனைத்து வகையான நிதிசார் கருவிகளிலும் உள்ள மதிப்பிட்டின் அடிப்படையில் சபை அறவிடுகின்றது. இந்த மதிப்பீடுகள் காசின் காலப் பெறுமதி, ஒப்பந்தத்தின் நிபந்தனையை மீறல், வாடிக்கையாளர் நிலைமை பகுப்பாய்வு, கிடைக்கவேணடியவற்றின் உப குழு, கடன்படுனரின் கொடுப்பனவு விபரங்கள், இணை மதிப்புகள், கடன் ஆபத்தில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு பற்றிய மதிப்பீடு, வாடிக்கையாளர்களின் நிதி சிரமங்கள், சட்ப் பிரச்சனை, நியாயமான மற்றும் ஆதரிக்கக்கூடிய தகவல் மற்றும் எதிர்கால பொருளாதார நிலைமை பற்றிய முன்னறிவிப்பு போன்ற பல்வேறு எண்ணிக்கையினாலான காரணிகளால் இயக்கப்படுகின்றன.

இழப்பீட்டு நட்டங்களானது சொத்தின் மேற்கொண்டுசெல்லும் அளவு அல்லது அதன் காசு உற்பத்தி செய்யும் அலகுகள் அதன் அறவிடப்படக்கூடிய தொகையைத் தாண்டிச் செல்லும்போது அடையாளம் காணப்படுகிறது. இழப்பீட்டு நட்டங்கள் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றன.

## (இ) மீள் அடையாளம் காணல்

ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் திகதியிலும், முன்னரான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட இழப்பீட்டு நட்டங்கள் குறைவடைந்துள்ளனவா அல்லது அகன்றுவிட்டனவா என்ற அறிகுறிகளுக்காக மதிப்பிடப்படுகிறது. அறவிடப்படக்கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்கு மதிப்பீடுகளில் ஏதாவது மாற்றம் இருப்பின், இழப்பீட்டு நட்டங்கள் மீள் அடையாளம் காணப்படும்.

## 3.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றம் சாதனம்

## (அ) அடையாளம் காணுதலும், அளவீடும்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பன அதன் கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் ஏதாவது திரண்ட இழப்பீட்டு நட்டங்களில் கழித்து காட்டப்பட்டுள்ளன. கிரயம், சொத்து கொள்வனவிற்கு நேரடியான செலவினமாகக் காட்டப்படுவன அடங்கலாகும். சுயமாகக் காட்டப்பட்ட சொத்துக்களின் கிரயம் பொருட்களின் கிரயம், நேரடி உழைப்பு, மற்றும் வேறு ஏதாவது கிரயங்கள் அந்த சொத்து என்ன தேவைக்கானதோ அதனை இயங்கும் நிலைக்குக் கொண்டுவருவதற்கான ஏனைய நேரடி கிரயங்கள், கழற்றுவதற்கான கிரயம், விடயங்களை அகற்றுவதற்கான கிரயம், அவை அமைவிடத்தை பழைய நிலைக்குக் கொண்டுவருதல் என்பன அடங்கலாகும்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு SLFRS 1 இன்படி, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் மதிப்பீடு செய்யும்போது அதன் மேற்கொண்டு செல்லப்பட்ட பெறுமதியில் 2011 ஜனவரி 01 ஆம் திகதியன்று திரண்ட தேய்மானத்தை கழித்து, வருகின்ற தொகையே 2011 ஜனவரி 01 ஆம் திகதியன்று பெறுமதியாகக் கருதப்பட்டுவருகிறது.

## (ஆ) தேய்மானம்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் சாதனத்தின் சகல விடயங்களுக்குமான தேய்மானம் கிரயம்/மதிப்பீடு நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகிறது. நிலையான சொத்துக்களுக்கான தேய்மானம் அவை பாவனைக்குக் கிடைக்கக்கூடியபோது, கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் அறவிடப்படுகிறது. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் சாதனம் என்பனவற்றிற்கு வருடந்தோறும் அவற்றின் பயன்பாட்டுக் காலத்தில் தேய்மானம் மேற்கொள்ளப்படுகிறது. பராதீனப்படுத்தப்படாத காணிகளுக்கு தேய்மானம் மேறகொள்ளப்படுவதில்லை.

| சொத்துக்களின் வகை | வருடாந்த தேய்மான வீதம் | காலம் (ஆண்டுகள்) |
|---|---|---|
| கட்டடங்களும் அமைப்புகளும் | 5 | 20 |
| பொறித்தொகுதி, இயந்திரங்கள் | 10 | 10 |
| இணைப்பும் பொருத்துதலும் | 10 | 10 |
| அலுவலக தளபாடம்,உபகரணம | 10 | 10 |
| கணனிகள் | 33.33 | 3 |
| மோட்டார் வாகனங்கள் | 20 | 5 |

### (இ) மீள் அடையாளம் காணல்

ஆதனம் மற்றும் உபகரண விடயங்கள் வெளியேற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலத்தில் எந்த பொருளாதார அனுகூலமும் எதிர்பார்க்கப்படாதவிடத்து, மீள் அடையாளம் காணப்படுகின்றன. சொத்து, பொறித் தொகுதி, சாதனம் ஒன்றினை மீள அடையாளம் காணுதலினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அதனை விற்று வரும் தொகைக்கும், அந்தச் சொத்தை மேற்கொண்டு செல்லும் தொகைக்குமிடையிலான வித்தியாசமாகத் தீர்மானிக்கப்படுவதுடன், இது வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

### (ஈ) அடுத்தடுத்த செலவினம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் விடயம் ஒன்றை மாற்றிடல், மேம்படுத்தல், மற்றும் அதன் பாகமொன்றை நிர்மாணித்தலுக்கான கிரயமானது அந்தப் பாகத்தில் அடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு உள்வருவதும், அந்தக் கிரயத்தை நம்பத்தகுந்த விதத்தில் அளவிடக்கூடியதுமாக இருப்பதும் சாத்தியமானால் அந்தத் தொகையை மேற்கொண்டு செல்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் நாளாந்த சேவைகளுக்கான கிரயங்கள் ஏற்பட்டதாக வருமான மற்றும் ஏனைய விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### (உ) ஆதனம், பொறித்தொகுதி சாதனம் என்பவற்றின் விற்பனையிலிருந்து இலாபம்/நட்டம்

ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்பவற்றை உபயோகிக்க முடியாதபோது அல்லது வெளியேற்றப்படும்போது ஏதாவது இலாபம் அலலது நட்டம் அந்த விற்பனை நடந்த காலத்தில் அடையாளம் காணப்பட்டால் அவை ஏனைய செயற்பாட்டு வருமானம் அலலது செலவினம் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது.

### (ஊ) தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலை

இவ்வாண்டில் ஏற்பட்ட மூலதன செலவினங்களில் நிதிசார் நிலைமைக் கூற்று தினத்தில் பூரணப்படுத்தப்படாதவை தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலையாகக் காட்டப்பட்டுள்ளன. இவை ஏதாவது திரண்ட இழப்பீட்டு நட்டங்களைக் கிரயத்திலிருந்து கழித்துக் கூறப்பட்டுள்ளன. தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலைகளில் முகாமைத்துவத்தின் நோக்கத்திற்கமைய செயற்படுத்தக்கூடியவாறும், குறித்த அமைவிடத்திலும், தேவையான நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருக்கக்கூடியதான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்துடன் மெகா திட்டங்களுக்காக தள்ளிப்போடப்பட்ட மற்றும் ஏற்பட்ட செலவினங்கள் என்பன அதற்குரிய சொத்துக்களின் வகைக்கு மாற்றப்பட்டுள்ளது.

### (எ) குத்தகை சொத்துக்கள்

நிதிசார் பொறுப்புக்களின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு, குத்தகைக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் என்ற வகையின் கீழ் அதேயளவு நிதிசார் பொறுப்பாக அடையாளம் காணப்பட்டு, சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. நிதிக் குத்தகையின் கீழுள்ள சொத்துக்கள் அவை பயன்படுத்தப்படும் காலம் பூராவும் தேய்மானத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.

### (ஏ) கட்டமைப்புக்கள்

ஏழு பிரதான உப வகுதிகளின் கீழ் கட்டமைப்புகளின் நியாயமான பெறுமதிகள் மதிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதான உப வகுதியுடனும் தொடர்புபட்ட சகல விடயங்களும், அங்கங்களும் ஒரு அலகின் பகுதியாகுவதாகக் கருதப்படுகின்றன.

3.3

### (அ) முதலீட்டு ஆதனங்கள்

முதலீட்டு ஆதனங்கள் குறிப்பிட்ட ஆதனங்களை வகைப்படுத்தும் தினத்தில் நடைமுறையிலுள்ள (கிரய மாதிரி) பெறுமதியில் முதலீட்டு ஆதனங்களின் கீழ் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

முதலீட்டு ஆதனங்கள் தொடர்பான எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் சபைக்குக் கிடைக்கக்கூடியதானது சாத்தியமானாலும், கிரயமானது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியுமானதாக இருக்குமெனில் அத்தகையவை முதலீட்டு ஆதனங்களாக அடையாளம் காணப்படும். வாடகை வருமானத்தை உழைப்பதற்காக வைத்திருக்கும் ஆதனங்களானது முதலீட்டு ஆதனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதலீட்டு வருமானங்களின் நியாயமான பெறுமதி அளவிடப்படுவதில்லை. முதலீட்டு ஆதனம் பற்றிய அங்கீகரிக்கப்பட்டதும், தொழில்துறை சாந்தது தகைமையகை கொண்ட சுயாதீனமான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு மேற்கொளப்படவில்லை.

முதலீட்டு ஆதுனங்கள் அவை வெளியேற்றப்படும்போது அல்லது முதலீட்டு ஆதனம் பாவனையிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவதுடன், அதனை நீக்குவதனால் எதிர்காலத்தில் பொருளாதார நன்மை எதுவும் எதிர்பார்க்காதவிடத்து, அவை மீள இனங்காணப்படும்.

### (ஆ) தேய்மானம் (கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு )

காணி தவிர முதலீட்டுச் சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயம்/முதலீட்டுச் சொத்துக்களின் மதிப்பீட்டில் கணிக்கப்படும். முதலீட்டுச் சொத்துக்களுக்கான தேய்மானம் வருடந்தோறும் பின்வருமாறு அவற்றின் பயன்பாட்டுக் காலம் வரைக்கும் மேற்கொள்ளப்பட்டது.

| சொத்துக்களின் வகை | வருடாந்த தேய்மான வீதம் | காலப்பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|
| கட்டடங்கள் | 5 | 20 |

## 3.4 தொட்டுணர முடியாத சொத்துக்கள்

### (அ) அடையாளம் காணுதலும் அளவீடும்

குறிப்பிட்ட காலத்திற்கு உபயோகமான வாழ்வைக் கொண்டதும், சபையினால் பெற்றுக்கொண்டதுமான தொட்டணர முடியாத சொத்துககள் அடையாளம் காணப்பட்டதுடன், திரண்ட கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு மற்றும் இப்பீட்டு இழப்புகள் கழித்து கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

### (ஆ) கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு

கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு வருமானம் மற்றும் ஏனைய விளக்கமான வருமானக் கூற்றில் நேர்கோட்டு அடிப்படையிலட தொட்டுணர முடியாத சொத்துக்களின் மதிப்பிட்பட்ட உபயோகமான வாழ்வு வரைக்கும் அவை எப்போது பாவனைக்குக் கிடைககப்பபொற்றதோ அத் தினத்திலிருந்து அடையாளம் காணப்படுகிறது.

| சொத்துக்களின் வகை | வருடாந்த தேய்மான வீதம் | காலப்பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|
| மென்பொருள் உத்தரவுப் பத்திரம | 5 | 20 |

### (இ) ஓய்வும் அகற்றலும்

ஒரு தொட்டுணர முடியாத சொத்து அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலத்தில் பொருளாதார அனுகூலங்கள் எதிர்பார்க்காது தொடர்ந்து அகற்றும்போது மீள இனங்காணப்படுகின்றது.

## 3.5 பொருட்பதிவேடுகள்

சகல பொருட்பதிவேடுகளும் குறைவான ஆகுசெலவில் அல்லது தேறிய பெறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. முதல் உள்வரல் முதல் வெளியேறல் (FIFO) அடிப்படையில் கிரயம் தீர்மானிக்கப்படுகிறது.

## இலங்கை முதலீட்டுச் சபை

## நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

### 3.6 ஏனைய சொத்துக்கள்

ஏனைய கடன்படுனர், கிடைக்கவேண்டியவை, முற்பணங்கள், வைப்புக்கள், முற்செலுத்தப்பட்டவை என்பன ஏனைய சொத்துக்களில் அடங்கும்.

### (அ) முற்பணங்கள், வைப்புக்கள், முற்செலுத்தப்பட்ட செலவினங்கள்

ஒரு நிதியாண்டை விடக் கூடுதலான காலத்திற்கு அனுகூலமானதாக அல்லது சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் செலவினம் முற்பணங்கள், வைப்புகள், மற்றும் முற்செலுத்தப்பட்ட செலவினங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய செலவினம் கால விகிதாசார அடிப்படையில் அவை எவ்வளவு காலத்திற்கானதோ அதற்கேற்ப பதிவழிக்கப்படும்.

### (ஆ) ஏனைய கடன்படுனர்

ஏனைய கடன்படுனர் கிரயத்தில் இழப்பீட்டு நட்டம் கழித்து, அடையாளம் காணப்படுவர். ஏனைய பெற்றுக்கொள்ள வேண்டியவையின் கீழ் உள்ள மொத்தம் ரூபா 507,650.00 தலைமை அலுவலகத்தில் காசு குறைபாடாகக் காட்டப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கு பூர்த்தியாகாத நிலையிலுள்ளது.

### 3.7 காசும், காசுக்கு சமமானவையும்

காசும், காசுக்கு சமமானவையும் கையிருப்புக் காசு மற்றும் குறுகிய கால, துரித கதியில் மாற்றக்கூடிய மூலதனங்களை உள்ளடக்கியதாகும். இவை வேண்டிய நேரத்தில் உடனடியாக வேண்டிய அளவு மாற்றக்கூடியவையும், பெறுமதியில் எந்த குறிப்பிடப்பட்ட தீங்கு எதனையும் விளைவிக்காதவையுமாகும். குறுகிய கால காசு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இவை வைத்திருக்கப்படுகின்றன.

### 3.8 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று சம்பந்தமாக இலங்கை கணக்கீட்டு தரம் இல.7 (LKAS) க்கு அமைய மறைமுகமான வழிமுறைகளைப் பயன்படுத்தி, காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 3.9 ஊழியர் அனுகூலங்கள்

### (அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

முறைப்படியான நியதிச் சட்டங்களுக்கும், பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதி (EPF) பங்களிப்பிற்கும், ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) பங்களிப்பிற்கும் தகுதியுடையவர்களாவார்கள். சபை, ஊழியர்களின் மொத்த வரும்படியின்

நிலையான பங்களிப்புகளை ஊழியர் சேமலாப நிதிக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் செலுத்துகிறது. மேலும் தொகையினைச் செலுத்தவேண்டுமென்று சட்டரீதியானதோ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடோ எதுவும் இருக்காது.

### (ஆ) வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்கள் என்பவை வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த தொழிலுக்குப் பிற்பாடான தொழிற்பாடுகளாகும். 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடை கொடுப்பனவு சட்ட இல.12 நியதியின்படி சபை பணிக்கொடை செலுத்தவேண்டும். இச் சட்டத்தின் கீழ் ஆயுட்கணக்கர் மதிப்பீட்டின் அடிப்படையில் கடப்பாட்டிற்கான ஏற்பாடு தீர்மானிக்கப்படுகிறது.

### 3.10 பொறுப்புக்களும், ஏற்பாடுகளும்

கடந்தகால சம்பவங்களின் பயனாக கணக்குத் தீர்த்தலால் பொருளாதார அனுகூலங்கள் கொண்ட வளங்கள் வெளிச்செல்வதற்கு வழிவகுப்பதாக எதிர்பார்க்கப்படுவதால் தற்போதைய சட்டரீதியான/ஆக்கபூர்வமான கடப்பாடுகள் காணப்படும்போது நிதிசார் நிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள் அடையாளம் காணப்படுகின்றன.

கடன்படுனரின் கோரிக்கைக்கு அமைய செலுத்தவேண்டிய கடப்பாடுகள் அல்லது நிதிசார் நிலைமைக் கூற்று தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் நிதிசார் நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாகக் கணிக்கப்படுகின்றன. நிதிசார் நிலைமைக் கூற்று தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் நிதிசார் நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத பொறுப்புக்களாகக் கணிக்கப்படுகின்றன.

## நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

### ஏனைய பொறுப்புக்கள்

ஏனைய பொறுப்புக்கள், சேர்ந்த செலவினம் உட்பட ஏனைய கடன் கொடுத்தவர்களை உள்ளடக்கியதாகும். இவை அவற்றின் நியாயமான பெறுமதியாகக் கருதப்பட்டு, அவற்றின் வரலாற்றுப் பெறுமதியில் கூறப்பட்டுள்ளது.

### 3.11 வருமானத்தை அடையாளம் காணல்

சேவைகள் ∴கட்டணத்திலிருந்தான வருமானமானது பெற்றுக்கொண்ட கைம்மாறு அல்லது பெற்றுக்கொள்ளவேண்டியவற்றின் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகிறது. உத்தரவுப் பத்திர கட்டணம் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைக் கட்டணம் என்பன காசு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### நில வாடகை

இமுச இற்குச் சொந்தமான காணிகளை முதலீட்டாளர்களுக்கு 30 ஆண்டுகள் முதல் 99 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கு குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்தடப்படுகின்றன.

### (அ) வட்டி வருமானம்

இலாபம் அல்லது நட்டத்தின் மூலம் நியாயமான பெறுமதியாக அளவிடப்பட்ட நிதிசார் கருவிகள் உட்பட்ட சகல வட்டியுடனான நிதிசார் கருவிகளுக்கான வட்டி வருமானம் வருமானக் கூற்றில் "நிதி வருமானம்" என்பதற்குள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### (ஆ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் ஒரு அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

### 3.12 செலவினங்கள்

### செலவினங்களை அடையாளம் காணல்

### (அ) வருமானச் செலவினம்

சகல செலவினங்களும் வழங்கப்பட்ட கைம்மாற்றின் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டதுடன், அந்த செலவினங்கள் அவை சம்பந்தப்பட்ட காலத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன. வருமான கூற்றில் சபையினால் உழைத்த மிகை சகல தெரிந்த பொறுப்புக்களுக்கும், ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் என்பவற்றின் தேய்மானத்திற்குமான ஏற்பாட்டின் பின்னரானவையாகும்.

### (ஆ) மூலதனச் செலவினம்

நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் அல்லது நிறுவனத்தின் சேவை/உற்பத்திக் திறனை அதிகரிக்கும் நோக்குடன் நிலையான தன்மையிலுள்ள சொத்துக்களை விரிவுபடுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குச் செலவிடப்படும் செலவினம் மூலதன செலவினமாகக் கணிக்கப்படுகிறது.

ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் சாதனங்கள் கைதவிர்த்தலில் முடிபுறுத்தலில் கிடைக்கும் இலபாங்கள்/இழப்புக்கள், இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விளக்கமான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### (இ)) நிதி வருமானங்களும் நிதி செலவினங்களும்

